DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

HomeLife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1526
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday July 4, 2025

# இலங்கையில் உள்ள செம்மணி மனிதப் புதைகுழிகள் குறித்து சர்வதேச விசாரணை நடத்த இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை



இலங்கையின் வடக்கே உள்ள செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் குறித்து அவசர சர்வதேச நடவடிக்கை எடுக்க பிரிட்டி' நாடாளுமன்றத்தில் 02-07-2025 பதன்கிழமையன்று வெளியிடப்பட்ட ஒரு சக்திவாய்ந்த அறிக்கை, தமிழ் பொதுமக்களுக்கு எதிரான பல தசாப்தங்களாக தீர்க்கப்படாத போர்க்குற்றங்களை எடுத்துக்காட்டு-கிறது.

தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவரான டேம் சியோபைன் மெக்டோனா எம்.பி., பொது மன்றத்தின் சார்பாக இந்த அறிக்கையை வெளியிட்டார், இப்பகுதியில் மனிதப் புதைகுழிகள் அகழ்வாராய்ச்சியில் ஏற்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து கடுமையான கவலை தெரிவித்தார். இந்த அறிக்கை, இலங்கை உள்நாட்டுப் போரின் போது நடந்த அட்டூழியங்களுடன் மனிதப் புதைகுழிகளை இணைக்-கிறது மற்றும் நீதிக்கான அதன் சொந்த ஆணைகளை ஐக்கிய நாடுகள் சபை நிலைநிறுத்த வலியுறுத்துகிறது.

# கனடா — ஸ்காபுறோவில், சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்று நேர்த்தியான போட்டிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பெற்ற இவ்வாண்டின் Miss Tamil Universe- Queens of Angels - 2025 "தேவதைகளின் அரசி"



கடந்த 20 ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடைபெற்று வரும் **Miss Tamil Universe- Queens of Angels** - "தேவதைகளின் அரசி" யைத் தேர்ந்தெடுக்கும் மேடைத் தேர்வு இவ்வாண்டு பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பெற்று கடந்த 27-06-2025 அன்று வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்றது.

கனடா- ஸ்காபுறோவில், சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்று நேர்த்தியான போட்டிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பெற்ற இவ்வாண்டின் **Miss Tamil Universe- Queens of Angels - 2025** "தேவதைகளின் அரசி"யாக படிப்படியான தேர்வுகள் மற்றும் ஆற்றல்களை வெளிக்காட்டல் ஆகியவற்றினைத் தொடர்ந்து செல்வி ராகவி ஜோன்னா நரேந்திரன் தேர்ந்தெடுக்கப்பெற்றார். இரண்டாவது இடத்தை செல்வி அனுஷாதேவி மாறனும் மூன்றாவத இடத்தை செல்வி வெங்கடராஜலக்சுமியும் தட்டிக் கொண்டார்கள். (தொடர்ச்சி 22ம் பக்கம்)



Vacancies Motel & Restaurant
நயாகரா நகரப் பகுதியில் உள்ள Motel & Restaurant ஒன்றில் சமையறை உதவியாளர் மற்றும் சுத்திகரிப்பு வேலைக்காரர் ஆகியோர் உடனடியாகத் தேவை. கணவன் -மனைவி தம்பதியாக இருந்தால் நன்று.சம்பளம் பேசித்தீர்க்கலாம். தொடர்புகளுக்கு
416 560 6025

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழில் நண்பர்களுடன் மது அருந்திய இளைஞன் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு உயிரிழப்பு!

பு. கஜிந்தன்



யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் நண்பர்களுடன் மது அருந்திக்கொண்டிருந்த இளைஞர் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த இதன்போது திருநாவுக்கரசு துஜீவன் (வயது 27) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞனும் அவரது நண்பர்களும் நேற்றிரவு மதுபானம் அருந்திக்கொண்டிருந்தனர். இந்நிலையில் குறித்த இளைஞனுக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது.

இதன்போது உடனிருந்த நண்பர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இருப்பினும் குறித்த இளைஞன் உயிரிழந்தார்.

அவரது நண்பர்கள் சிலர் தலைமறைவாகிய நிலையில் சுன்னாகம் பொலிஸ் அவர்களை தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# ஜேர்மனியிலிருந்து யாழ்ப்பாணம் வந்த கோப்பாய் வாசி ஒருவர் கிருமியின் தாக்கத்தால் உயிரிழப்பு!

ஜேர்மனில் இருந்து யாழ்ப்பாணம் வந்த ஒருவர் கிருமி தாக்கத்தினால் 02-07-2025 அன்று உயிரிழந்துள்ளார். கோப்பாய் தெற்கு, கோப்பாய் பகுதியில் வசித்து வந்த நடராசா கேதீஸ்வரநாதன் (வயது 75) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த முதியவர் கடந்த ஜனவரி மாதம் ஜேர்மனியில் இருந்து வருகை தந்து கோப்பாய் பகுதியில் வசித்து வந்தார். இந்நிலையில் திடீரென உடல் சுகயீனம் ஏற்பட்டு 2ம் திகதி அன்றையதினம் புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி வின்சன் அன்ரலா மேற்கொண்டார். இனங்காண முடியாத கிருமித் தாக்கத்தினால் இந்த மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

# காரைநகர் பாலத்தடியில் விபத்தில் சிக்கிய இளைஞன் உயிரிழப்பு!

காரைநகர் பாலத்தடியில் விபத்தில் சிக்கிய இளைஞன் உயிரிழந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பாலத்தடியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் 3ம் திகதி அன்றையதினம் வியாழக்கிழமை அன்றைய தினம் உயிரிழந்துள்ளார். இதன்போது காரைநகர் - களபூமி பகுதியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை பவன்ராஜ் (வயது - 22) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளும் லான்ட்மாஸ்டர் ஒன்றும் கடந்த 1ஆம் திகதி இரவு காரைநகர் பாலத்தடியில் மோதி விபத்து சம்பவித்தது.

இந்நிலையில் படுகாயமடைந்த இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி குறித்த இளைஞன் வியாழக்கிழமை அன்றையதினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி வின்சன் அன்ரலா மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# கனடாவிலிருந்து யாழ்ப்பாணம் சென்றிருந்த பெண்ணொருவர் பட்டா ரக வாகனம் மோதி உயிரிழப்பு!

கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் சென்றிருந்த பெண்ணொருவர் பட்டா ரக வாகனம் மோதியதால் 2ம் திகதி அன்றையதினம் புதன்கிழமை உயிரிழந்துள்ளார். கண்டி வீதி, மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற குறித்த விபத்தில் சுமதி இராஜரட்ணம் (வயது 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண் அங்கு தனது உறவினர்கள் வீட்டில் தங்கியிருந்த போது கடந்த 27ஆம் திகதி பாண் வாங்குவதற்காக துவிச்சக்கர வண்டியில் சென்றபோது வீதியால் சென்ற பட்டா ரக வாகனம் அவர்மீது மோதியது. இந்நிலையில் அவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி புதன்கிழமை அன்றையதினம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி வின்சன் அன்ரலா மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# செம்மணி புதைகுழிக்கு நீதி கிடைக்க வேண்டும் என தெற்கில் இருந்து ஒலித்த சகோதர மொழி பேசும் இளைஞரின் குரல்!



யாழ்ப்பாணம் - செம்மணி பகுதியில் கொடூரமாக கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டவர்களுக்கு நீதியை இந்த அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என தென்பகுதி சிங்கள சமூக செயற்பாட்டாளரான திரு.அர்ஜுன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - செம்மணி பகுதியில் மனித எலும்புக்கூடுகள் அகழப்படுகின்றன. இதில் சிறுவர்கள், பெரியோர்கள் என கொடூரமாக கொலை செய்யப்பட்ட 34 பேரின் எலும்புக்கூடுகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த பிரச்சினையில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம். இந்த விடயம் குறித்து சிங்கள மக்களாகிய நாங்களும் தமிழ் மக்களுடன் இணைந்து ஒன்றாக இருக்கின்றோம்.

யுத்த காலத்தில் ஏராளமானோர் காணாமல் ஆக்கப்பட்டார்கள். அவர்களது குடும்ப உறுப்பினர்கள் நீண்ட காலமாக அவர்களை தேடும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே இந்த புதிய அரசாங்கத்திடம் நாங்கள் கேட்பது என்னவெனில், இதற்கு ஒரு தீர்வினை வழங்குங்கள். இதனால் அமைச்சர்களுக்கும் பெரிய பிரச்சினை இருக்கின்ற அதேவேளை மக்களுக்கும் இதனால் பிரச்சினை உள்ளது. புதிய அரசாங்கத்திடம் இருந்து இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைத்தால் தான் மக்களுக்கு தீர்வு கிடைக்கும் என்றார்.

# யாழ்ப்பாணத்தில் வீதி விளக்கு கம்பத்தில் திருத்தங்கள் செய்துகொண்டிருந்த மின்சார சபை ஊழியர் மின்சாரம் தாக்கி படுகாயம்!




யாழ்ப்பாணத்தில் வீதி மின் விளக்கினை பழுது பார்த்துக்கொண்டிருந்த ஊழியர் ஒருவர் மின்சார தாக்குதலுக்கு இலக்கான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கொக்குவில் சந்தையை அண்மித்த பகுதியில் 1ம் திகதி அன்றையதினம் செவ்வாய்க்கிழமை காலை, வீதி மின்விளக்குகளை பழுது பார்த்துக்கொண்டிருந்த வேளை மின்சாரம் தாக்கியுள்ளது.

இதன்போது, மின்சார தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்த ஊழியரை சக ஊழியர்கள் மீட்டு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் நோயின் தாக்கம் தாங்க முடியாத முத – ியவர் உயிர்மாய்ப்பு!

யாழில் நோயின் வீரியம் தாங்கமுடியாத முதியவர் ஒருவர் 3ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார். சுதுமலை தெற்கு, சாவல்கட்டு பகுதியை சேர்ந்த இராசா அழகரத்தினம் (வயது 73) என்பவரே இவ்வாறு உயிர்மாய்த்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த முதியவர் பல்வேறு வியாதிகளால் பாதிக்கப்பட்டு காணப்பட்டார். இந்நிலையில் நோயின் வீரியம் தாங்க முடியாமல் இன்றையதினம் தவறான முடிவெடுத்து தூக்கில் தொடங்கியுள்ளார்.

அவரை மீட்ட உறவினர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

Canada — We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1    Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள்    Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca    email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# கனடிய தமிழ் அச்சு ஊடகங்களைக் காப்பாற்றி வேண்டிய பொறுப்பு யாருடையது?

உலகில் இலத்திரனியல் ஊடகங்களுக்கு முன்னரேயே தோன்றியவை பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளான அச்ச ஊடகங்கள் என்பதை அறியாதவர்கள் சிலரே. அதுவும் வாசிப்பு பழக்கம் மற்றும் உலக அரசியல் செய்திகளில் நாட்டம் கொண்டவர்களுக்கு அச்சு ஊடகங்கள் மீது உள்ள நேசம் சொல்லில் அடங்காதவை.

தமிழ்ப் பத்திரிகைகள எடுத்துக் கொண்டால் இலங்கை, இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பத்திரிகை வாசிப்பதில் உயர் கல்வி கற்றவர்களை விட தொழிலாளர்களும் விவசாயிகளும், மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் அதிகளவில் உள்ளார்கள் என்பதை தரவுகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். எனினும் கல்வியறிவில் உயர்ந்தவர்களும் தனவந்தர்களும் வாசிப்பு பழக்கம் அற்றவர்கள் என்பதை அழுத்திச் சொல்லுவது எமது நோக்கமும் அல்ல.

சாதாரணமானவர்கள் வாசிப்பு பழக்கத்தை தினந்தோறும் கடைப்பிடிக்கின்றனர் என்பதற்கு ஒரு நல்ல உதாரணத்தை யாழ்ப்பாணத்திலிருந்து நாம் எடுத்து வருகின்றோம். “திருநெல்வேலி சந்தை“யை பற்றி கேள்விப்படாதவர்கள் வட இலங்கை யாருமே இருக்கமாட்டார்கள். அந்த சந்தை நல்லூர் பிரதேசச் சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அங்கு பணியாற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவர் தினமும் பத்திரிகைகளை வாசிக்கும் கொண்டவர் அதி-காலையிலேயே சந்தைக்கு செல்லும் தனது சுத்திகரிப்பு பணியை சீராகச் செய்த பின்னர் தனது உணவருந்தும் வேளையில் அங்குள்ள கடைகளிலிருந்து தமிழ்ப் பத்திரிகைகளை ஒவ்வொன்றாக எடுத்து வாசித்துவிட்டு அப்படியே திரும்பவும் அந்த தட்டுக்களில் வைத்துவிடுவார்களாம். கடைக்காரர்கள் கூட அவரது வாசிப்புக்கு தடையாக இருக்க மாட்டார்களாம். தேநீர்க் கடைக்காரர்கள் அவருக்கு இலவசமாக தேநீரும் சிற்றுாண்டிகளும் வழங்குவார்களாம்.

இவ்வாறு தனது பணிகளையும் பத்திரிகை வாசிப்பையும் நிறைவு செய்த பின்னர் அவர் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்திற்குச் சென்று ஓரமாக ஒரு இடத்தில் நிற்பாராம். அங்கு பணியாற்றும் கற்றவர்களான உத்தியோகத்தர்கள் அவரிடம் கேட்பார்களாம். “இன்று என்ன செய்தி? சொல்லப்பா! என்று.

அவரும் தான் வாசித்த உலக மற்றும் உள்ளூர்ச் செய்திகளையும்

அரசியல் செய்திகளையும் விபரங்களுடன் எடுத்துச் சொல்வாராம். இந்த விடயம் அங்கு வாரத்தில் ஐந்து நாட்களும் நடைபெறும் ஒன்றாகும். வுாசிப்பு பழக்கம் கொண்ட அந்த தொழிலாளிக்காக காத்திருந்த கற்றவர்கள் இருந்த காலம் இன்றிலிருந்து சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர். இப்போது எப்படி இருக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். அலுவலகத்தில் பணி செய்யும் உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளை சரியாகச் செய்யாமல்

தொலைபேசியைத் தட்டிக் கொண்டிருப்பார்கள்.


இப்போது இவ்வார “கதிரோட்டத்தின்“ தலைப்பிற்கு வருவோம். கனடாவில் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் பத்துக்குக் குறையாத பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. அவற்றில் வாராந்த மற்றும் மாதாந்த பத்திரிகைகள் அடங்குவன. ஆனால் காலப்போக்கில் தற்போது வாராந்தம் வெளிவருகின்ற தமிழ்ப் பத்திரிகைகள் இரண்டாக “சுருங்கிக்“ கொண்டன. இந்த “சுருக்கம்“ என்பது எண்ணிக்கையில் மாத்திரமல்ல பத்திரிகைகளின் பக்கங்களிலும் தங்கியிருக்கின்றது.

எனினும் எமது “உதயன்“ மற்றும் “உலகத் தமிழர்“ ஆகியவற்றின் வாராந்த வெளியீடுகள் தவறாமல் வெளிவந்தாலும் ஒவ்வொரு வாரமும் அவை “சுகமான பிரசவமாக“ இல்லை என்பதை இரண்டினதும் வெளியீட்டாளர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் நன்கு உணர்ந்து சவால்களுடன் தங்கள் ஊடகப் பணிகளை தொடர்ந்த வருகின்றார்கள்.

சவால்களுக்கு மத்தியில் எமது சமூகத்தின் வர்த்தகர்கள் சிலரும் மத்திய மற்றும் மாகாண அரசில் உள்ள உறுப்பினர்கள் சிலரும் அச்சு ஊடகங்களை காப்பாற்றும் வகையில் விளம்பரங்களை அவ்வப்போது தந்த வண்ணம் உள்ளார்கள்.

கனடாவில் வெளிவரும் நூற்றுக்கணக்கான பல்லினப் பத்திரிகைகளும் மத்திய அரசின் சிறிய உதவிகள் வருடத்திற்கு ஒரு தடவை வழங்கப்பெறுகின்றன. அதற்கு மேலாக பல் மொழிப் பத்திரிகைகளின் அவசியமும் அவற்றின் தேவையும் பற்றி பல வருடங்களாக கனடாவின் சில மாகாண முதல்வர்களும் பிரதமர்களும் பல்லினப் பத்திரிகையாளர்கள் மத்தியில் தெரிவித்த ஆரோக்கியமான கருத்துக்களையும் பத்திகைகளை இன்னும் நேசிக்கும் இதயங்களுக்காக இங்கு பதிவு செய்கின்றோம்.

அந்த அரசியல் தலைவர்கள் தெரிவித்த அல்லது உணர்ந்து பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் இவைதான். “ஒரு இனம் சார்ந்த பத்திரிகை ஒன்று குறிப்பிட்ட அந்த இனத்தின் அல்லது மொழியின் அடையாளமாகவே திகழ்கின்றது“ என்பதை அவர்கள் பகிரங்கமாக வெளியிட்டு வருகின்றனர். அதன் காரணமாகவே அச்சு ஊடகங்களுக்கு தங்கள் ஆகக்குறைந்த ஆதரவை அவர்கள் வழங்கி வருகின்றார்கள். எனவே நாம் மேற்கூறிய கருத்துக்களின் முடிவுரையாக எமது சமூகத்தின் ஆதரவும் நேசிப்பும் எமது அச்சு ஊடகங்களுக்கு தொடர்ந்தும் இருக்க வேண்டிய ஒன்றே என்ற நம்பிக்கையுடன் நாம் காத்திருக்கின்றோம் என்பதை வெளிப்படையாகவே நாம் பதிவு செய்கின்றோம்.!




வல்மொறின் முருகன் ஆலய வருடாந்த தேர் உற்சவத்திற்கான விசேட சொகுசு பஸ் சேவை - TORONTO வில் இருந்து.....
யூலை 19ம் 20ம் திகதிகளில் சனி ஞாயிறு தினங்களில் ஹோட்டல் மற்றும் சொகுசு பஸ் கட்டணங்கள் 199.00 டாலர்கள் மட்டுமே.
பக்தர்ளை ஏற்றும் இடங்கள்: Ajax-Markham- Scarborough-Vaughan-Etobicoke-Brampton ஆகியனவாகும் .பயணச் சீட்டுகளுக்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: 416.317.0052 / 647.821.7895

Sapphire Banquet & Catering
Specializing in Videography & Photography
- Anniversary Party - Birthdays
- Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers
SHIVA SUBRAMANIAM (647) 406-4868

Space for Rent
நடனம் பயில்வதற்கு வாடகைக்கு இடம் உண்டு.
(பழைய தமிழ்ப் பூங்கா இருந்த இடம் - மார்க்கம்)
5 வயதிற்கு மேற்பட்டோருக்கான இசை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
(ஓகன், கிற்றார், றம்) ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்
Raj - (416) 454-1893

இலங்கை செய்திகள் Sri Lanka News

# ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரை செம்மணி, சித்துப்பாத்தி மனிதப்புதைகுழிகளுக்கு அருகில் அழைத்துச் சென்றது முதன்மையான மனித உரிமைகள் சட்டத்தரணிகள் அமைப்பாகு ஆகும்

## யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா இந்த அனுமதியை வழங்கியபோது "நுழைவாயிலுக்கு வெளியிலிருந்து உயர்ஸ்தானிகர் புதைகுழியை பார்வையிடலாம்" என அநுரவின் அரசாங்கம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது



இலங்கைக்கு வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் உயர் பதவியிலுள்ள மனித உரிமைகள் உத்தியோகத்தருக்கு வடக்கில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழிகளை பார்வையிடும் வாய்ப்பானது, இறுதித்தருணம் வரை அதற்கு இடையூறு செய்வதற்கு அரசாங்கம் மேற்கொண்ட வெற்றியளிக்காத திட்டமிடப்பட்ட முயற்சிகளை, காணாமலாக் கப்பட்ட தமிழ் மக்களின் உறவினர்களால் நீதிமன்ற நடவடிக்கை மூலம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னரே கிடைத்துள்ளது.

குற்றமொன்று நிகழ்ந்த இடமாக இனங்காணப்பட்டு நீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் உள்ள புதைகுழி பிரதேசத்திற்குள் நுழைவதற்கு நீதவானின் அனுமதி அவசியமாகும். ஐக்கிய நாடுகள் பிரதிநிதிக்காக அந்த அனுமதியைப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதது மாத்திரமல்ல அதற்கு கடுமையாக இடையூறு விளைவித்த முறைமையையும் தோலுரித்துக் காட்டியமை, நீதிமன்றத்துக்கு நிலைமைகளைக்கூறி வென்றெடுத்த அனுமதியின் மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பிரதானியை செம்மணி, சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிகளைப் பார்வையிட அழைத்துச் சென்ற நாட்டின் முதன்மையான மனித உரிமைகள் சட்டத்தரணிகள் குழாம் ஆகும்.

யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா இந்த அனுமதியை வழங்கியபோது "நுழைவாயிலுக்கு வெளியிலிருந்து உயர்ஸ்தானிகர் புதைகுழியை பார்வையிடலாம்" என்பது அரசாங்கத்தின் தீர்மானம் என அறிவித்து அரசாங்கம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரின் இலங்கை வருகைக்கு முன்னர் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் செம்மணி மனிதப் புதைகுழி வளாகத்துக்குள் நுழைவதற்கும் பிரதேச மக்களுடன் உரையாடுவதற்கும் வோல்கர் டர்க்கிற்கு "வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாக" கூறியிருந்தார். எனினும் அதற்காக எந்தவிதமான சட்டரீதியான அல்லது நிர்வாக மட்டத்திலான திட்டங்களை மேற்கொண்டதாக அமைச்சர் தெளிவுபடுத் தியிருக்கவில்லை.

இலங்கைக்கு மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு வருகைத் தந்திருந்த உலக மனித உரிமைகள் பிரமுகர் நாட்டுக்கு வந்திறங்கி இரண்டு நாட்கள் கடந்த பின்பும் அவர் சார்பில் யாழ்ப்பாணத்தின் செம்மணி, சித்துப்பாத்தி பாரிய மனிதப் புதைகுழிகளை கண்காணிப்பதற்கான நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என தற்போது தெரியவந்துள்ளது.

அதுமாத்திரமன்றி, உயர்ஸ்தானிகர் கண்காணிப்புக்காக நுழைவதற்குத் தேவையான நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்குக்கூட அரசாங்கம் திட்டமிட்ட அடிப்படையில் இடையூறு விளைவித்த முறையை மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கன நிலையம் (CHRD) வெளிப்படுத்தியுள்ளது.

"இது ஒரு திடீரென்று செய்யப்பட்ட ஒரு விடயமல்ல," என பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல்கொடுக்கும் சட்டத்தரணி கே.எஸ். ரத்னவேல் ஜுன் 25ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து குற்றஞ்சாட்டினார்.

உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கிற்கு யாழ்ப்பாணம் செம்மணி, சித்துப்பாத்தி பாரிய மனிதப் புதைகுழியைப் பார்வையிடுவதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளாத அரசாங்கம் அதற்காகப் பாடுபட்டவர்களையும் தடுப்பதற்கு பிரயத்தனம் மேற்கோண்ட முறையையும் CHRD நிறைவேற்றுப பணிப்பாளர் விபரித்தார்.

"உயர்ஸ்ரானிகர் செம்மணிக்கு வருவதற்கு ராஜதந்திர மட்டத்தில் மட்டுமல்ல, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தின் அனுமதியையும் பெறப்பட வேண்டும். ஏனென்றால் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு ஆராய்ச்சி என்பது யாழ்ப்பாண நீதவானால் நேரடியாக அவருடைய மேற்பார்வையில், நீதிமன்றத்தின் மேற்பார்வையில் நடைபெறுகிறது. அங்கு நடைபெறும் எல்லா விடயங்களும்- அதாவது, நிபுணர்கள் மற்றும் அது சம்பந்தப்பட்ட விற்பன்னர்கள், களத்தில் இருப்பவர்கள், பொலிஸ்- இவர்கள் எல்லோரையும் மேற்பார்வை செய்வது நீதவான் நீதிமன்றம்தான். எனவே அவருடைய நீதவான் நீதிமன்றத்தின் அனுமதியைக்கோர வேண்டும் என்கிற விடயம் சம்பந்தப்பட்ட பலருக்கும் தெரிந்திருந்தது. அதனால் இது நிச்சயமாக அரச தரப்பிலிருந்து செய்யப்பட்டிருக்க வேண்டும். தாங்களே செய்வதாக வாக்களித்து (வாக்குறுதி) விட்டு, ஆனால் ஜுன் 24 வரைக்கும் அதனை-அந்த நீதிமன்றத்துக்கு செய்ய வேண்டிய விண்ணப்பத்தை தாங்கள் செய்யாதது மாத்திரமல்ல, செய்ய இருப்பவர்களையும் தடுத்து விட்டார்கள்."

சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். ரத்னவேல் ஊடகவியலாளர்களுக்கு அறிவித்ததன் அமைய உயரஸ்தானிகர் வோல்கர் டர்க்கிற்கு பாரிய மனிதப் புதைகுழியைப் பார்வையிடுவதற்கான அனுமதியை பெறுவதற்கான இயலுமை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காகக் குரல்கொடுக்கும் சட்டத்தரணிகளின் தலையீடு மூலமாகவே சாத்தியமாகியுள்ளது.

"எனவே பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக இது வரைக்கும் நாங்கள் சட்டத்தரணிகளாக இந்த விடயத்தை தாங்களே கையிலெடுத்து இந்த விண்ணப்பத்தை செய்திருந்தோம். ஏனென்றால் இது அரச தரப்பிலிருந்து வர வேண்டிய ஒரு விடயம். அவர்கள் தாங்கள்தான் செய்ய வேண்டும் என தீர்மானித்துவிட்டு, பிறகு கடைசி நிமிடத்தில் எவரையும் செய்யக்கூடாது என்ற ஒரு அடிப்படையில் அவர்கள் இந்த விடயத்தைக் கையாண்டிருந்தார்கள். இது ஒரு முகத்தைக்காட்டிவிட்டு, அதாவது நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வருகை தரலாம் என்ற ஒரு விடயத்தை பொதுவெளியில் சொல்லிவிட்டு, ஆனால் உண்மையில் அதை நடைமுறையில் கடைபிடிக்காமல் அதனை தடுக்கும் விதமாகவே அவர்கள் செயற்பட்டிருந்தார்கள்."

ஐ.நா. உயர் ஸ்தானிகர் வோல்கர் டர்க்கின் இலங்கைக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின்போது சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ள செம்மணி மனிதப் புதைகுழியை ஆய்வு செய்யும் திட்டங்கள் எதையும் ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது நீதி அமைச்சோ இதற்கு முன்னர் அறிவித்திருக்கவில்லை. நீதிமன்றம் மனிதப்புதைகுழியைப் பார்வையிட உயர்ஸ்தானிகருக்கு அனுமதி வழங்கியபோது அவர் மயானத்துக்குள் நுழையக்கூடாது என்பது அரசாங்கத்தின் தீர்மானம் என்பதை அறிவித்து பொலிஸார் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததாக, பாதிக்கப்பட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். ரத்னவேல் யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

"எங்களை மாத்திரமல்ல பொலிஸ் தரப்பினரையும் மற்றும் சட்ட வைத்திய அதிகாரியையும், மற்றும் காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தையும் நீதிமன்றத்துக்கு வரவழைத்து சம்மதத்தைப் பெற்றுத்தான் இந்த மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சி நடக்கும் களத்துக்கு வந்து பார்வையிடுவதற்கான அனுமதியைக் கொடுத்தது. அனுமதி வழங்கப் பட்டபோதும் அத்தருணத்தில் பொலிஸ் தரப்பில் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. ஆணையாளர் அவர்கள் இந்த அகழ்வாராய்வு நடக்கும் இந்த செம்மணி புதைகுழிக்கு உள்ளுக்குள் வராமல் வெளியே நின்று, அதாவது நுழைவாயிலுக்கு வெளியில் நின்று அவர்கள் பார்வையிடலாம் என்பதே அரசாங்கத்தின் தீர்மானமாக இருந்தது என பொலிஸ் தரப்பினரால் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது."

இலங்கையில் பாரிய மனிதப்புதைகுழி தொடர்பான விசாரணைகளுக்காக சர்வதேச தலையீட்டை முன்மொழிந்து பாதிக்கப்பட்டவர்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளின் நியாயத்தன்மையை உறுதிப்படுத்தி செம்மணி தொடர்பில் உலகமே ஏற்றுக்கொள்ளும் ஒரு மனித உரிமைகள் உத்தியோகத்தருடன் அரசாங்கம் பாராமுகமாக நடந்துகொண்ட முறையை சட்டத்தரணி ரத்னவேல் "மனித உரிமைகளுக்கு செய்த அவமானம்" என வர்ணிக்கிறார்.

"அவரை நுழைவாயிலுக்கு வெளியே நிறுத்தி வைத்துவிட்டு தூரத்தில் இருந்து பார்க்குமாறு கூறுவது சரியல்ல. அவர் ஒரு இராஜதந்திரி. அதாவது, உலக நாடுகள் அனைத்தும் அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி. அவர் ஓர் உயர்மட்ட இராஜதந்திரியாக கருதப்படுகின்றார். ஒரு அரச தலைவருக்கான மரியாதை அவருக்கு தரப்பட்டிருக்கிறது. அவர் தொடர்பில் நாங்கள் எந்த விதத்திலும் நாங்கள் இவ்வாறான ஒரு அணுகுமுறையை செய்தால் அது அவருக்கு செய்யும் அவமரியாதையாக மாத்திரமல்ல உலக மனித உரிமைகள் விடயத்திலும் பாராமுகமாக இருப்பதாக, அல்லது அவதூறு செய்வதாக அமையும்" என்ற கருத்தில் நாம் எங்கள் வாதத்தை முன்வைத்தோம். அதன்படி நீதவான் அனுமதி வழங்கினார்.

ஜுன் 25ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணி மற்றும் சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிகளை ஆய்வு செய்த வொல்கர் டர்க் உள்ளிட்ட ஐ.நா. பிரதிநிதிகளுடன் CHRD சட்டத்தரணிகள் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தின் (OMP) உறுப்பினர்களும் இணைந்து கொண்டனர்.

எவ்வாறாயினும், பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அங்கு நுழைவதைத் தடை செய்யும் நீதிமன்ற உத்தரவைப் பெற்றிருந்த பொலிஸார் அகழ்வாராய்ச்சி நடைபெறும் களத்தில் ஐ.நா. பிரதிநிதியின் செயற்பாடுகள் குறித்து செய்தி வெளியிட ஊடகவியலாளர்களை அனுமதிக்கவில்லை.

ஜுன் 25ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணி, சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அருகே கருத்து தெரிவித்த ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க், மனிதப் புதைகுழிகள் பற்றிய உண்மையை வெளிக்கொணர்வதற்கு தடயவியல் தொடர்பில் நிபுணத்துவம் உள்ள சுயாதீன நிபுணர்களின் தலைமையில் விரிவான, வலுவான விசாரணை நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

"விசாரணைகள் சர்வதேச தரநிர்ணயங்களுக்கு ஏற்ப பாரபட்சமற்ற முறையிலும் முழுமையாகவும் நடத்தப்பட வேண்டும். நாடு முழுவதும் ஏராளமான பாரிய மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன," என்ற வொல்கர் டர்க்கின் கூற்றை இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகம் சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இலங்கை தொடர்பில் தொகுக்கும் புதிய அறிக்கை செப்டெம்பரில் ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.



# செம்மணி மனித புதைகுழியில் காணப்பட்ட குழந்தைகளுக்கான காலணிகள், பொம்மைகள்!

இலங்கை செய்திகள் Sri Lanka News



இலங்கையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனித புதைகுழியில் இருந்து, ஒரு குழந்தையின் எலும்புக்கூடு போல் தோன்றும் ஒரு எலும்புக் கூடுக்கு அருகில், நீல நிறத்தில் ஆங்கில எழுத்துக்கள் எழுதப்பட்ட ஒரு நீல நிறப் பை, ஒரு சிறிய பொம்மை, விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஒரு செருப்பு சிலநாட்களுக்கு முன்னரம் கண்டெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் செம்மணி, சித்துப்பாத்தி இந்து மயான மனித புதைகுழியில் இருந்து இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள 38 எலும்புக்கூடுகளில், குறைந்தது 10, சிறுவர்கள் அல்லது குழந்தைகளுடையது என சந்தேகிக்கப்படும் எலும்புக்கூடுகள் அடங்குமென ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இது நீதிமன்றத்தால் குற்றம் நடந்த இடமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"ஏற்கனவே ஒரு பையுடன் அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடு, நாள் முழுவதும் தோண்டப்பட்டு முழுமையாக மீட்கப்பட்டது," என பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில், புதைகுழி அகழ்வுப் பணிகளை மேற்பார்வை செய்யும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா குறிப்பிடுகின்றார்.

ஜூலை முதலாம் திகதிக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட 33 மனித எலும்புகளுக்கு மேலதிகமாக ஐந்து மனித எலும்புகள் அடையாளம் காணப்பட்டாலும், எலும்புகள் பின்னிப் பிணைந்திருப்பதாகத் தோன்றுவதால் சரியான எண்ணிக்கையைக் கூற முடியாது என அவர் மேலும் கூறினார்.

"முழு நாள் அகழ்வுப் பணியில் சுமார் ஐந்து ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்த எலும்புக்கூட்டு தொகுதி அடையாளம் காணப்பட்டுள்ளன. எனினும் எண்ணிக்கையை சரியாக குறிப்பிட முடியாது. குழப்பமாக காணப்படுகிறது."

தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவால் அடையாளம் காணப்பட்டு, மனித எலும்புகள் இருக்கக்கூடிய இடங்களாக நீதிமன்றத்திற்கு அறிக்கை அளிக்கப்பட்ட இடத்தை சுத்தம் செய்யும் பணிகள், இன்றைய தினம் (ஜூன் 1) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபை ஊழியர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டதாக சட்டத்தரணி ரணிதா ஞானராஜா ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

1990 களில் செம்மணி அகழ்வுப் பணிகளை முன்னெடுத்த சட்ட வைத்திய அதிகாரி கிளிபர்ட் பெரேரா அகழ்வு பணிகளை பார்வையிட்டதோடு, அகழ்வாராய்ச்சிகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளுடன் அகழ்வாராய்ச்சி தொடர்பான பழைய தகவல்களைப் பற்றி விவாதித்ததாகவும் சட்டத்தரணி ரணிதா குறிப்பிடுகின்றார்.


செம்மணிப் பகுதியில் முன்னூறு முதல் நானூறு வரையிலான புதைகுழிகள் இருப்பதாக, செப்டம்பர் 7, 1996 அன்று பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசாமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்து கொலை செய்த குற்றத்திற்காக இலங்கை இராணுவத்தின் நான்கு உறுப்பினர்களுடன் சேர்ந்து குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ச, கொழும்பு உயர் நீதிமன்ற சாட்சிக்கூண்டில் இருந்தவாறு தெரிவித்திருந்தார்.

1999 ஆம் ஆண்டு அந்த இடத்திலிருந்து மீட்கப்பட்ட 15 உடல்களில், இரண்டு உடல்கள் 1996 இல் காணாமல் போன இளைஞர்களின் உடல்கள் என அடையாளம் காணப்பட்டன. எஞ்சிய 13 உடல்கள் குறித்து எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை.

எலும்புக்கூடுகள் தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி, சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அகழ்வாராய்ச்சிகள் மே 15 ஆம் திகதி தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ மற்றும் யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் ஆரம்பமானது.





இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இன, மத, மொழித் தேசியவாதங்களால் பிளவுபட்டுக்கொண்டிருக்கும் உலகை சூழற் தேசியத்தாலேயே ஒருங்கிணைக்க இயலும்

## பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு!




பாரம்பரிய வாழ்விடத்தையும் தனித்துவமான, மொழியையும் பண்பாட்டையும் கொண்டுள்ள மக்கள் கூட்டத்தைத் தேசிய இனங்கள் என்று அரசியல் அறிஞர்கள் வரையறை வரையறை செய்துள்ளார்கள். இயறை செய்துள்ளார்கள். இதில் உயர்வென்றும் தாழ்வென்றும் எதுவுமில்லை. ஆனால், எண்ணிக்கையில் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் தேசிய இனங்கள் தங்களை உயர்வாகக் கருதிச் சிறுபான்மைத் தேசிய இனங்களை அடக்கியொடுக்கி வருகின்றன. இவ்வொடுக்குமுறைக்கு எதிராகச் சிறுபான்மைத் தேசிய இனங்கள் கிளர்ந்தெழுகின்றன. இன, மத, மொழித் தேசியவாதங்களால் பிளவுபட்டுக் கொண்டிருக்கும் உலகை சூழற்தேசியத்தாலேயே ஒருங்கிணைக்க இயலும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுகிழமை (29.06.2025) நடைபெற்ற பசுமை அமைதி விருதுகள் விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

காலத்துக்குக்காலம் மானுடத்தை வழிநடத்துவதற்கென்று சிந்தனையாளர்களால் கோட்பாடுகள் முன்மொழியப்பட்டு வந்துள்ளன. சோசலிசக் கோட்பாடு பல தேசிய இனங்களைக் கொண்ட நாடுகளில் இனங்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காக உருவானது. ஆனால், சோசலிச நாடுகள் பிற்காலத்தில் முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கு முகங்கொடுக்க முடியாமல் அடிபணிந்தபோது அங்கு இனங்களுக்கிடையில் மோதல்கள் தலைது தலை தூக்கியது. னியன் சிதறுண்டதும் ஒரு காலத்தில் ஒன்றாக இருந்த உக்ரைன் மீது சோவியத் ரஸ்யா இப்போது படையெடுப்பதும் சோசலிசச் சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்தியதில் இருந்த குறைபாடுகளால் ஏற்பட்ட விளைவுகள்தான்.

போர்களில் ஏற்படும் உயிரிழப்புகளைவிட சுற்றுச்சூழல் சீர்குலைவினால் ஏற்படும் உயிரிழப்புகள் உயிரிழப்புகள் அதிகமாகும் காலம் வெகு வெகு தொ தொலைவில் இல்லை. வளங்களின் அளவுக்கு மிஞ்சிய நுகர்வால் வளப்பற்றாக்குறைவு ஏற்பட்டு, எஞ்சியுள்ள வளங்களைப் பங்கிடுவதில் முரண்பாடுகளும் மோதல்களும் வெடித்துள்ளன. பூமியின் வெப்ப உயர்வு காரணமாகக் கடல் மட்டம் உயர்ந்து தீவு நாடுகளில் கரையோரப்பகுதிகளை மெல்ல மெல்லக் காவுகொண்டு“ வருகிறது. காலநிலை மாற்றத்தின் விளைவுகளாகத் காலந்தப்பிய அடை மழை, கடும் வரட்சி, காட்டுத் தீ, உயிரினங்களின் அழிவு, இதுவரை காணாத புதுப்புது நோய்கள் என்று பல்வேறு சூழற் பிரச்சினைகள் தினந்தினம் உலகை அச்சுறுத்திக்கொண்டிருக்கின்றன.

தற்போதுள்ள அரசியற் கொள்கைகள், கோட்பாடுகளினால் சூழற் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க இயலாததாலேயே சூழலியம் என்ற புதிய கோட்பாடு முகிழ்த்து வருகிறது. ஒவ்வொரு தேசிய இனமும் தன்னை முதன்மைப்படுத்தும் மனிதமையச் சிந்தனையைத் தவிர்த்து சூழல்நேயச் சிந்தனைக்கு முதலிடம் கொடுத்தால் மட்டுமே அது வாழுகின்ற சூழலைப் பாதுகாக்க முடியும். இதன் மூலமே ஒட்டுமொத்தப் பூமியும் பாதுகாக்கப்படும். ஆபத்தின் விழிம்பில் நிற்கும் உலகை காப்பாற்றுவதற்குச் சூழலியற்தேசியம் என்ற கோட்பாட்டை உலகை வழிநடத்துகின்ற கோட்பாடாக நாம் ஏற்றுக்கொண்டால் மாத்திரமே எம்மையும் ஏனைய உயிரினங்களையும் பேரழிவுகளிலிருந்து காப்பாற்ற இயலும் என்றும் தெரிவித்துள்ளார்.



# மன்னார் நகரில் உடைக்கப்பட்ட தந்தை செல்வாவின் உருவச்சிலை புனரமைக்கப்பட்டு திறந்து வைப்பு



(01-07-2025)

மன்னார் நகரில் அமைந்திருந்த தந்தை செல்வாவின் உருவச்சிலை கடந்த வாரம் இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்ட நிலையில் குறித்த உருவச்சிலை இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு யூலை 1ம் திகதி அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் மத தலைவர்கள், இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கட்சியின் உறுப்பினர்கள், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன்,நகர சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் மத தலைவர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மன்னார் நகர மத்தியில் மாவட்டச் செயலகத்திற்கு முன் அமைக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் சிலை கடந்த புதன்கிழமை (25) அதிகாலை இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டுள்ளது.

தந்தை செல்வாவின் சிலை உடைக்கப்பட்ட சம்பவம் குறித்து இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை முக்கியஸ்தர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தந்தை செல்வாவின் உருவச் சிலையில் காணப்பட்ட அவரது தலை முழுமையாக அகற்றப்பட்ட நிலையில் அவரது சிலைக்கு அருகில் இருந்து தலைப்பாகம் மீட்கப்பட்டுள்ளது.

சிலை உடைப்பு சம்பவத்தை தொடர்ந்து மன்னார் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைவாக குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# இந்த நாட்டில் இடம்பெற்ற பல மோசமான சம்பவங்களில் பிள்ளையானுக்கு தொடர்பு உண்டு என்கிறார் தேசிய மக்கள் சக்தி கந்தசாமி பிரபு





பிள்ளையான் போன்றவர்கள் இந்த நாட்டிலே இடம்பெற்ற பல மோசமான செயல்களில் சம்மந்தப் பட்டிருப்பதாக இன்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது எனவே அந்தடிப் படையில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் அது சட்டரீதியாக இடம்பெறும் என தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் செவ்வாய்க்கிழமை (02) பழைய கச்சேரி மண்டபத்தில் அபிவிருத்தி குழு தலைவரும் அமைச்சருமான சுனில் ஹந்துன்நதி தலைமையில் இடம்பெற்றது.

இதில் போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்னாயக்கா. கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால், நாடாளுமன்ற உறுப்பினர்களானக. பிரபு, ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா, வைத்தியர் இ.சிறிநாத், இரா.சாணக்கியன் மற்றும் அரசாங்க அதிபர் திருமதி. ஜே.ஜே. முரளீதரன், மற்றம் திணைக்கள அதிகாரிகள் பிரதேசசபை தவிசாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அபிவிருத்திகுழுவில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் க. பிரபு இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்ற வகையில் நாட்டில் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம் அதனடிப்படையில் மட்டக்களப்பில் பெருந்தெருக்கல் மற்றும் போக்குவரத்து விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்காவின் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களில் உள்ள அபிவிருத்தி தொடர்பாகவும் பல திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாக கலந்துரை யாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் எந்தவோரு செயற்பாடுகளை செயல்படுத்த முடியாது என கூக்குரல் இட்டு திரிந்த எதிர்கட்சியினர் இன்று அடங்கி போய் இருக்கின்றனர்.

இன்று சிறுபோக வேளாண்மை அறுவடை செய்யப்பட்டு வருகின்றது கடந்த காலங்களில் நெல்லுக்கான நிர்ணய விலையை நிர்மானிப்பதற்கு கூட முடியாத கடந்த கால அரசாங்கம் இருந்தது. ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டை பெறுப்பேற்ற பின்னர் நெல்லுக்கான நிர்ணய விலையை 120 ரூபாவாக அதிகரித்துள்ளதுடன் அதனை கொள்வனவு செய்வதற்காக 6 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பாக நீதி அமைச்சர் பல விடையங்கள் தொடர்பாக கலந்து ஆலோசித்து வருகின்றதுடன் அதனை திருத்துவது தொடர்பாக சட்டத்தரணிகள், சமூக அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்களுடன் கடந்த வாரம் கலந்து உரையாடியுள்ளார் அதனை மறுசீரமைக்க கலந்து ஆலோசித்து ள்ளோம்.

பிள்ளையான் போன்றவர்கள் இந்த நாட்டிலே பல மோசமான செயல்களில் சம்மந்தப்பட்டிருப்பதாக இன்று விசாரணைகள் மோற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது அதற்கான விசாரணையில் எந்த முடிவு வருகின்றதே அந்தடிப் படையில் தீர்மானம் மேற்கொள்ளப் படும் அது சட்டரீதியாக இடம்பெறும்.



தேசிய மக்கள் கத்தி மக்களின் நலன்சார்ந்த பணியை முன்னெடுத்துவரும் அரசாங்கம் மக்களின் ஆதரவுடன் நீடித்து பயணிக்கும் என எதிர்கட்சியினருக்கு நாங்கள் சவால் விடுகின்றோம். என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்



- எஸ்.ஆர்.லெம்பேட் (03-07-2025)

நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா 3ம் திகதி அன்று வியாழக்கிழமை மாலை மாலை 6 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நானாட்டான் பங்கிற்கு உட்பட்ட 08 துணை ஆலயங்களுக்கான கொடிகளும் ஏற்றி வைக்கப்பட்டது.

முத்தரிப்பு பங்குத்தந்தை அருட்தந்தை தேவராஜா கொடுதோர் தலைமையில் 3ம்திகதி அன்றைய தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.





தொடர்ந்து நவநாள் திருப்பலிகள் இடம் பெற்று எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் ஆண்டகை தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப் படும்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கிழக்கில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினரால் ஊடகவியலாளர் ஒருவரம் தாக்கப்பட்டார்



அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர், உள்ளூர் அதிகார சபை அமைக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே ஒரு சுயாதீன ஊடகவியலாளரை தாக்கி, கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தாக்கப்பட்ட பிபிசி தமிழ் சேவை சுயாதீன ஊடகவியலாளர் யு.எல். மப்றூக், ஜூலை 2ம் திகதி புதன்கிழமையன்று அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ரியா மசூர் உட்பட மூன்று பேர், தனது ஊடக அறிக்கையிடலைக் கேள்வி எழுப்பிய பின்னர், தன்னைத் தாக்கி கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக அக்கரைப்பற்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஊடகவியலாளரை தாக்கிய இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ரியா மசூர், கடந்த முறை அட்டாளைச்சேனை பிரதேச சபையின் பிரதிநிதியாகவும் இருந்ததாகவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அவர் 100 சபை அமர்வுகளில் 40 இல் மாத்திரமே பங்கேற்றிருந்ததாகவும், இந்த விடயத்தை ஊடகங்களில் அறிக்கையிட்டதாகவும் யு. எல். மப்றூக் தெரிவிக்கின்றார்.

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரத்தின் போது, ரியா மசூர் தனது அரசியல் எதிரிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்த, ஜனநாயக விரோத செயற்பாட்டையும் தான் அறிக்கையிட்டதாக மப்றூக் கூறுகிறார்.

தன்னைப் பற்றி இதுபோன்ற செய்திகளை எவ்வாறு வெளியிட முடியும் என கேள்வி எழுப்பி தாக்குதல் நடத்திய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ரியா மசூருடன் சேர்ந்து தன்னைத் தாக்கிய மற்ற இருவரும் மது போதையில் இருந்ததாக அக்கரைப்பற்று பொலிஸில் செய்த முறைப்பாட்டில் யு.எல். மப்றூக் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரண்டு தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினரின் ஆகியோரின் ஆதரவுடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஏ.எஸ்.எம். உவைஸ் ஜூலை 2 ஆம் திகதி அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

ரியா மசூர் உள்ளிட்ட மூன்று பேர் தான் தாக்கப்பட்டபோது, தன்னைக் காப்பாற்றியது அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தலைவர் ஏ.எஸ்.எம். உவைஸ் தான் என ஊடகவியலாளர் மப்றூக் தனது தொழில்முறை சகாக்களிடம் கூறியுள்ளார்.

ஏனைய ஊடகவியலாளர்களும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி யு.எல். மப்றூக் பெற்ற தகவல்களை தங்கள் செய்திக்கு ஆதாரமாகப் பயன்படுத்தியுள்ளனர்.


# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மாவட்ட தலைமையுடன் தொடர்ந்து பணியாற்ற முடியாது



## தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை பொருளாளர் பதவி விலகல். இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருக்கு கடிதம்

மன்னார் நிருபர்

- எஸ்.ஆர்.லெம்பேட்

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளையின் பொருளாளர் தி.பரஞ்சோதி கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்து விலகுவதாக இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளருக்கு 1ம் திகதி அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை எழுத்து மூலம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர், முன்னாள் மாவட்டத் தலைவர், நானாட்டான் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் என்ற வகையில் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளையின் பொருளாளர் பதவியிலிருந்து நான் ராஜினாமா செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டத் தலைமை கடந்த தேர்தலில் தன்னிச்சையாகச் செயற்பட்டதுடன், உள்ளூராட்சி சபைகளை அமைப்பதில் அலட்சியமாகச் செயற்பட்டமை, கட்சிக்கும் மன்னார் மாவட்டத்திற்கு பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, தற்போதைய மாவட்ட தலைமையுடன் தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, மக்கள் மத்தியில் பல்வேறு வகையான விமர்சனங்கள் மற்றும் எதிர்ப்புகள் எழுந்துள்ளதால், தோல்வி மற்றும் பின்னடைவுக்கு தார்மீக பொறுப்பேற்று, பொருளாளர் பதவியில் இருந்து விலகுகிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரதி இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளை தலைவர், செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளையின் தலைவராக செயல்படும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கட்சிளின் தலைமை பதவியில் இருந்து விலகுவதாக பொதுச் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளது.

இவ்விடயம் குறித்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதனை தொடர்புகொண்டு வினவிய போது தான் மாவட்ட கிளை தலைமை பதவியில் இருந்து ராஜினாமா செய்ய உத்தேசித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கான இந்திய துணை உயர்ஸ்தானிகர் சாய் முரளி யை சந்தித்த செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான குழுவினர்



## பல்வேறு விடையங்கள் குறித்து கலந்துரையாடல்

- எஸ்.ஆர்.லெம்பேட்

இலங்கைக்கான இந்திய துணை உயர்ஸ்தானிகர் சாய் முரளி யை தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ சார்பாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான குழுவினர் 1ம் திகதி அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத்துதவராலயத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன், மாந்தை மேற்கு பிரதே சபை தவிசாளர் ஞானப்பிரகாசம் பிரேம் குமார், வலி கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், மன்னார் நகர சபை உறுப்பினர் செபமாலை ஆரோக்கியநாதன் பிகிறாடோ, மன்னார் பிரதேச சபை உறுப்பினர் றொயிட்டன் சாந்தினி குரூஸ் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த சந்திப்பின் போது பல்வேறு விடையங்கள் குறித்து கலந்துரையாடப் பட்டுள்ளது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல், பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தல், காங்கேசன்துறையில் கப்பல் கட்டுவதற்கு சிறிய நிலையம் ஒன்றை அமைத்தல், மன்னாரில் நவீன முறையில் விளையாட்டு மைதானம் அமைத்தல், மாந்தை மேற்கில் உள்ளக விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்தல், மன்னார் பிரதேச சபை பிரிவில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த தேவையான உதவிகள் போன்றவற்றை ஏற்படுத்தி தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன் போது தாங்கள் முன் வைத்த கோரிக்கைகள் மற்றும் வேண்டுகோளை இலங்கைக்கான இந்திய துணை உயர்ஸ்தானிகர் சாய் முரளி ஏற்றுக் கொண்டுள்ளதாக மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்தார்.

# இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட ராமேஸ்வர மீனவர்கள் 7 பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு





- எஸ்.ஆர்.லெம்பேட் (01-07-2025)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து படகு ஒன்றில் மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்ட 07 ராமேஸ்வர மீனவர்களையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் 01-07-2025 அன்று செவ்வாய்க்கிழமை மாலை உத்தரவிட்டார்.

ராமேஸ்வரம் துறைமுகத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை மீன்பிடிக்க சென்ற ஏழு மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்த நிலையில் இலங்கை கடல் பகுதியில் வைத்து கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் குறித்த மீனவர்களை செவ்வாக்கிழமையன்று மத்-ியம் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் மாலை குறித்த மீனவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த 07 மீனவர்களையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையாமல் எமது கடல் வளத்தை பாதுகாக்க இந்திய வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட தலைவர் அன்ரனி சங்கர்




- எஸ்.ஆர்.லெம்பேட்

இலங்கை எல்லைக்குள் இந்திய மீனவர்களின் படகுகள் வருகை தராமல் பாதுகாக்க வேண்டியது அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சரினுடைய கடமை என்பதை நாங்கள் கருதுகிறோம். எனவே இவற்றை கருத்தில் கொண்டு எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையாமல் எமது கடல் வளத்தை பாதுகாக்க இந்திய அரசு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட தலைவர் அன்ரனி சங்கர் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 3ம் திகதி வியாழக்கிழமை அன்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடபிராந்திய மீனவர்களின் பாரிய பிரச்சினையாக இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகைகள் காணப்படுகின்றன.

ராமேஸ்வரத்தில் இடம் பெற்ற கட்ச தீவு மீட்பு போராட்டம் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சரினால் கூறப்பட்ட விடயம் குறித்தும் அதற்கான தக்க பதிலடியை கடல் தொழில் அமைச்சர் வழங்கியுள்ளார். எமது கடல் தொழில் அமைச்சர் வழங்கிய பதிலடியை நாங்களும் கூற விரும்புகின்றோம்.

இந்திய இழுவைப்படகுகள் இலங்கை கடல் பரப்பில் அத்து மீறி நுழைந்து எமது கடல் வளத்தை நாசப்படுத்துவதும், இராமேஸ்வர மீனவ சங்கங்களினால் இலங்கைக்கு வந்து பேச்சு வார்த்தை மேற்கொள்ளச் சொல்வதும் கால அவகாசத்தை கோருவதாகவும் காணப்படுகின்றது.

இந்திய மீனவர்கள் சட்ட விரோதமான தொழிலையே மேற்கொள்கின்றனர். இதனை முற்று முழுதாக நிறுத்த வேண்டும்.கச்சை தீவை இலங்கைக்கு ஒப்பந்த மூலம் வழங்கும் போது அதற்கான பல்வேறு விடையங்களை இலங்கை விட்டுக் கொடுத்துள்ளது.

எமது மீனவர்களின் பிரச்சினை வாழ்வாதாரத்துடன் தொடர்பு பட்டதாக காணப்படுகிறது.

இலங்கை வட பகுதி மீனலவர்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். எமது மீனவர்களின் வயிற்றில் அடிக்கின்ற செயல்பாடுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கை எல்லைக்குள் இந்திய மீனவர்களின் படகுகள் வருகை தராமல் பாதுகாக்க வேண்டியது ஒரு நாட்டின் வெளிவிவகார அமைச்சரினுடைய கடமை என்பதை நாங்கள் கருதுகிறோம்.எனவே இவற்றை கருத்தில் கொண்டு எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையாமல்,எமது கடல் வளத்தை பாதுகாக்க வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் குறித்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் நகர சபையினால் கடந்த காலங்களில் பண்டிகைக் காலத்திற்கு என ஒதுக்கப்பட்ட வியாபார நிலையங்களில் பாரிய ஊழல் மோசடி அம்பலம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணை முன்னெடுக்க கோரிக்கை




- எஸ்.ஆர்.லெம்பேட் (03-07-20250

மன்னார் நகர சபையினால் கடந்த காலங்களில் பண்டிகை காலத்தையொட்டி வியாபார நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்ட வர்த்தக நிலையங்களில் பாரிய ஊழல் மோசடி இடம் பெற்றுள்ளமை கண்டுபிடிக் கப்பட்டுள்ளதோடு, குறித்த விடையம் குறித்து உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்க இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக மன்னார் நகர சபையின் தலைவர் டானியல் வசந்தன் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையில் 3ம் திகதி அன்றைய தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் நகர சபையினால் கடந்த 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை பண்டிகை காலத்திற்கு என ஒதுக்கப்பட்ட வியாபார நிலையங்களில் ஊழல் இடம் பெற்றுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக 3ம் திகதி அன்றைய தினம் வியாழக்கிழமை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளேன்.

குறித்த விடயங்கள் உரிய முறையில் விசாரணைக்கு உற்படுத்தப்பட்டு, மக்களின் பணம் திருடப்பட்டு இருந்தால் குறித்த பணம் மீள நகர சபைக்கு கொண்டு வர வேண்டிய கடமைப்பாடு இருக்கிறது.

இவ்வாறு ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஊழல் வாதிகளை, உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

மேலும் 2022 ஆம் ஆண்டு பண்டிகைக்கால வியாபரத்திற்கு என ஒதுக்கப்பட்ட கடைகளில் 31 கடைகள் ஏலம் இன்றி வழங்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. குறித்த விடயம் தொடர்பான உள்ளக விசாரணை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஊழல் மோசடி இன்னும் விசாரணையில் உள்ளமையினால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குறித்த விசாரணையை தமது பொறுப்பில் எடுத்து உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறான ஊழல் வாதிகளுக்கு தகுந்த தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும்.மேலும் மன்னார் நகரில் 5 ஜீ (FIVE G) டவர் அமைக்கும் விடயத்திலும் சூட்சுமமான முறையில் முறைக்கேடுகள் இடம் பெற்றுள்ளது.

குறித்த டவரில் மின் குமிழ்கள் அமைத்து தருவதாக கூறி நிர்வாகத்திடம் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.எனினும் குறித்த டவரில் 5 ஜீ தொழில்நுட்பம் இணைக்கப்பட்டுள்ளது.

உடனடியாக குறித்த விடயம் தொடர்பாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அதற்கான தீர்வையும் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

குறித்த விடயங்கள் குறித்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்து ஊழல் வாதிகளுக்கு தகுந்த தண்டனை யை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

பண்டிகைக்கால வியாபார நிலையங்களுக்கு இடம் ஒதுக்குவது தொடர்பில் கடந்த காலத்தில் குழு ஒன்று அமைக்கப்பட்டு, குறித்த குழுவின் ஊடாகவே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

குறித்த குழுவில் மன்னார் நகர சபையின் கணக்காய்வாளர், செயலாளர், கடந்த நகர சபை தலைவர், இரண்டு உறுப்பினர்கள் ஆகியோர் குறித்த குழுவில் செயல்பட்டனர்.

விசாரணைக்கு உட்படுத்த வேண்டியவர்கள் இவர்களாகத்தான் இருக்க வேண்டும்.அவர்களுக்கு தெரியாமல் கடைகள் ஏலம் இன்றி வழங்கி இருக்க முடியாது.

இவர்களை விசாரணைக்கு உட்படுத்தும் போது இவர்களில் யார் ஊழல் மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரிய வரும். என அவர் மேலும் தெரிவித்தார்.



# சர்வதேச ரோல் போல் உலக கிண்ண போட்டியில் சாதித்த மன்னார் வீர வீராங்கனைகள் கௌரவிப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (03-07-20250




2025 ஆண்டுக்கான உலக கிண்ண இளையவர் போட்டி மற்றும் பெரியோருக்கான ஆசியன் ரோல் போல் (Roll ball) அணியில் மன்னார் மாவட்டம் சார்பாக இலங்கை அணிக்கு தெரிவாகி சர்வதேச ரீதியில் மூன்றாம் இடம் பெற்று கொண்ட வீர வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு ரோல் போல் சங்க மன்னார் கிளை தலைவர் விமலேஸ்வரன் தலைமையில் 3ம் திகதி அன்றைய தினம் வியாழக்கிழமை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் பிரதான பாலத்தடி இல் இருந்து வெற்றி ஈட்டிய வீர வீராங்கனைகள் மாலை அணிவிக்கப் பட்டு மன்னார் நகர மண்டபம் நோக்கி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 27 வரை கென்யா நைரோபியில் இடம் பெற்ற ரோல் போல் உலக கிண்ண போட்டிக்கு தெரிவான இலங்கை அணியில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த மூன்று யுவதிகளும் 4 இளைஞர்களும் தெரிவாகி கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த போட்டியில் இலங்கை அணி மூன்றாவது இடத்தை பெற்ற நிலையில் குறித்த அணியில் விளையாடி திறமையை வெளிப்படுத்திய வீரர் வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டனர்.


குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், வலயக்கல்விப்பணிப்பாளர், மன்னார் நகரசபை தலைவர், மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அதிபர், சமூக சேவையாளர் அகஸ்ரி உட்பட ரோல் போல் வீரர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த உலக கிண்ண போட்டியில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த வின்சன் டடிசன் அணித் தலைவராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.




**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.
மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்கூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.
செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.
உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.
மேலதிக தகவல்களுக்கு '1-866-300-1765' என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள். இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது. உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# அணையா விளக்கு: கட்சி சாராப் போராட்டக் களங்களில் கட்சி சார்ந்தவர்களை அனுமதிக்கக் கூடாதா?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**செ**ம்மணிப் போராட்டக் களத்தில் சிவஞானம், சாணக்கியன் ஆகிய இரண்டு தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளையும் சந்திரசேகரன் உள்ளிட்ட ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அங்கிருந்த இனங்காணப்பட்ட சில நபர்கள் அவமதித்திருக்கிறார்கள். சிவஞானம் சொல்கிறார், யாரும் எங்களைத் துரத்தவில்லை நாங்களாக வெளியே வந்தோம் என்று. அவர்கள் வெளியேறிய பொழுது அவர்கள் அங்கிருக்கக்கூடாது என்று கருதியவர்கள் அவர்களைத் துரத்தி துரத்தி அவமதித்தார்கள். அதை காணொளி ஊடகங்கள் மற்றும் யூடியூபர்கள் தொடர்ந்து படம் பிடித்தார்கள். சிலர் அதை ”லைவ்விலும்” விட்டார்கள்.

தமிழ்த் தேசிய அரசியலில் இவ்வாறு மூத்த தலைவர்களை அல்லது அரசியல்வாதிகளை போராட்டக் களங்களில் இருந்து அகற்றுவது அல்லது உணர்ச்சிகரமான அரசியல் களங்களில் இருந்து அகற்றுவது என்பது ஒரு புதிய போக்கு அல்ல. இது சில தசாப்தங்களுக்கு முன்னுக்கே தொடங்கிவிட்டது.

குறிப்பாக ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரனின் இறுதி நிகழ்வின்போது அப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கதிரவேற்பிள்ளை அவ்வாறு அவமதித்துத் துரத்தப்பட்டார். அதற்குக் காரணமும் உண்டு. சிவகுமாரன் தேடப்படும் ஒரு நிலைமை வந்து தலைமறைவாகிய போது அவர் இந்தியாவுக்கு தப்பிச்செல்ல முயற்சிதார். அதற்கு கதிரவேற்பிள்ளையிடம் உதவி கேட்டுச் சென்றார்கள். அவர் உதவவில்லை. பின்னர் சிவகுமாரன் ஈழப் போரின் முதலாவது சயனைட் போராளியாக உயிர் நீத்தார். அவருடைய இறுதி நிகழ்வில் கலந்துகொள்ள வந்த கதிரவேற்பிள்ளையை அங்கிருந்து மக்கள் துரத்தி விட்டார்கள்.



அதுபோன்ற மற்றொரு சம்பவம், 1981இல் அமிர்தலிங்கம் யாழ். பல்கலைக்கழகத்துக்குள் வரும்பொழுது இடம்பெற்றது. அப்பொழுது ஆயுதப் போராட்டம் வளர்ச்சியடையத் தொடங்கிவிட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஆயுதப் போராட்டத்தோடு தொடர்புடையவர்கள் இருந்தார்கள். அமிர்தலிங்கம் தன்னுடைய மெய்க்காவலரோடு பல்கலைக்கழகத்துக்குள் வந்தார். உணர்ச்சி வசப்பட்ட மாணவர்கள் அவரை அங்கிருந்து துரத்தியது மட்டுமல்ல, அந்த மாணவர்களில் ஒருவர் அவருடைய மெய்க்காவலரின் கைத் துப்பாக்கியை பறித்துவிட்டார். எனினும் பின்னர் மாணவர் தலைவர்கள் சமரசம் செய்து அந்த துப்பாக்கியை மீண்டும் அமரலிங்கத்திடம் கொடுத்தார்கள். அதன்பின் அமிர்தலிங்கம் அதுபோன்ற உணர்ச்சிகரமான இடங்களுக்கு வருவதைத் தவிர்த்துக் கொண்டார்.

எனினும், சில ஆண்டுகளின் பின், ஆயுதப் போராட்டம் நிலத்தைக் கட்டுப்படுத்தும் வளர்ச்சியைப் பெற்றிருந்த ஒரு பின்னணிக்குள் அமிர்தலிங்கம் மீண்டும் வீரமாகாளி அம்மன் கோயிலில் ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். அப்பொழுது போராளிகளும் உட்பட இளையவர்கள் அவரைச் சூழ்ந்து நின்று கேள்வி கேட்டார்கள். அவருடைய உண்ணாவிரதத்தைக் குழப்பும் விதத்தில் அவருக்கு முன் உணவுப் பார்சல்களைக் கொண்டு வந்து வைத்துச் சாப்பிட்டார்கள். அமிர்தலிங்கம் தன் போராட்டத்தைத் தொடர முடியாதவராக அங்கிருந்து அகற்றப்பட்டார்.

பின்னர், சம்பந்தர். 2015 க்குப் பின் நடந்த ஒரு முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் கலந்து கொள்வதற்காக சம்பந்தர் வந்திருந்தார். அங்கே அவரை சூழ்ந்து கொண்ட ஊடகவியலாளர்கள் கேள்வி கேட்டார்கள். நிலைமை உணர்ச்சிக் கொதிப்புடையதாக மாறியது. ஒரு கட்டத்தில் ஒரு பெண் ஆவேசமடைந்தவராக சம்பந்தரை நோக்கி உரத்த குரலில் கேள்விகள் கேட்டார். சம்பந்தர் பதில் சொல்லவில்லை. அதற்குப்பின் சம்பந்தர் முள்ளிவாய்க்கால் நினைவு நாட்களுக்கு வருவதில்லை.

இந்த நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாகத்தான் செம்மணி வளைவில் அணையா விளக்கு போராட்டத்திலிருந்து தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அகற்றப்பட்டதையும் பார்க்க வேண்டும் விளங்கிக் கொள்ள வேண்டும். காலத்துக்குகாலம் தமிழ்மக்கள் தமிழ்த் தலைவர்களை அவ்வாறு அவமதித்திருக்கிறார்கள். அல்லது வெளித் தள்ளியிருக்கிறார்கள். இது புதியது அல்ல. அதிலும் குறிப்பாக இங்கே கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்னவென்றால், குறிப்பிட்ட தலைவர்களை தமிழ் மக்களே ஒரு காலகட்டத்தில் தெரிவு செய்திருந்தார்கள்.

சிவஞானம் வடமாகாண சபையின் அவைத் தலைவராக இருந்தவர். இப்பொழுதும் அவைத் தலைவருக்குரிய வளங்களையும் சலுகைகளையும் அனுபவிப்பவர். தமிழ்த் தேசிய அரசியலில் உள்ள ஒரு மூத்த தலைவர். சாணக்கியன், கிழக்கில் தமிழரசுக் கட்சியை கட்டியெழுப்பியதற்காகக் கொண்டாடப்படுகிறார். ஆனால் அவர்கள் இருவரும் சுமந்திரன் அணியைச் செய்தவர்களாகப் பார்க்கப்படுகிறார்கள். தமிழரசு கட்சிக்குள் காணப்படும் இரண்டு அணிகளுக்கு இடையிலான மோதல்தான் செம்மணி வளைவில் பிரதிபலித்தது என்று கருதப்படுகின்றது. அன்றைக்கு சம்பவம் நடந்த நாளன்று கிளிநொச்சியிலிருந்து ஆறுக்கும் குறையாத பேருந்துகளில் மக்கள் கொண்டுவரப்பட்டார்கள். இவர்களில் ஒரு பகுதியினர் தமிழரசுக் கட்சியோடு நெருக்கமாகக் காணப்பட்டவர்கள். சிறீதரன் அணியைச் சேர்ந்தவர்கள். அவர்களின் ஒருவர் அண்மையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட கிளிநொச்சி பிரதேச சபையின் தவிசாளரோடு வடமாகாண ஆளுநரைச் சந்திக்க வந்திருந்தார். அந்த ஒளிப்படம் ஊடகங்களில் வெளிவந்தது. அவர்தான் சிவஞானத்தை அவமதித்த நபர்களில் முக்கியமானவர், அல்லது அந்த சம்பவத்தை ஒழுங்கமைத்தவர் என்று சந்தேகிக்கப்படுகிறது. அது போலவே தேசிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகளை அவமதித்த இடத்தில் கிடைத்த காணொளிகளில், தமிழ்த் தேசியப் பேரவையைச் சேர்ந்த சில அரசியல்வாதிகளைக் காணக்கூடியதாக உள்ளது.

அணியா விளக்கு போராட்டமானது, இறுக்கமான ஒரு மக்கள் அமைப்பினால் முன்னெடுக்கப்படவில்லை. சில ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது உருவாக்கப்பட்ட தன்னார்வ அமைப்பு ஒன்றின் அடுத்த கட்ட வளர்ச்சிதான் அது. அரசியல் போராட்டங்களுக்கு ஒப்பீட்டளவில் புதிய அமைப்பு அது. எனவே அந்தப் போராட்டத்தை நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து தத்தெடுப்பதற்கு பல்வேறு சக்திகளும் முயற்சி செய்ததாகத் தகவல்கள் உண்டு. எல்லாவற்றையும் முறியடித்து அந்தப் போராட்டத்தை அதன் இறுதி இலக்குவரை நடத்துவதற்கு ஏற்பாட்டாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டதாகத் தெரிகிறது. குறிப்பாக அது கட்சி சாராப் போராட்டம் என்றபடியால் எல்லாக் கட்சிக்காரர்களும் அங்கே வந்திருந்தார்கள். ஆனந்த சங்கரியும் உட்பட. ஆனந்தசங்கரி முதல் நாள் போராட்டத்திலேயே அங்கே கதிரையில் அமர்ந்திருக்கக் காணப்பட்டார்.

அது கட்சிகடந்த ஒரு போராட்டமாக பரிணமித்தது. அதன் அடுத்தகட்ட வளர்ச்சியாகத்தான் அங்கே ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் வருகை தர வேண்டி வந்தது. இவ்வாறு எல்லாக் கட்சிக்காரர்களையும் அந்த அணையாத நெருப்பு தன்னை நோக்கி ஈர்த்தது. எனவே அங்கு வந்தவர்கள் எல்லாரும் அந்த நெருப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து வந்தவர்கள். அதாவது அங்கே அவர்கள் தங்களுடைய வருகைப் பதிவை உறுதிப்படுத்த வேண்டிய ஒரு அரசியல் நிர்பந்தத்தை அந்த போராட்டம் ஏற்படுத்தியது. எனவே அங்கே வந்தவர்களுக்கு வெவ்வேறு அரசியல் உள்நோக்கங்கள் இருந்திருந்தாலும், அவர்கள் அந்தப் போராட்டம் தவிர்க்க முடியாதது என்பதை ஏற்றுக் கொண்டு, அந்தப் போராட்ட களத்தில் தாங்களும் நிற்க வேண்டும், படம் எடுக்க வேண்டும், என்று தீர்மானித்து வந்திருந்தார்கள. இது அந்தப் போராட்டத்தின் வெற்றி.

அவ்வாறு வந்த வெவ்வேறு அரசியல் நம்பிக்கைகளைக் கொண்டவர்களை அந்தப் போராட்டத்தின் நீதியை ஏற்கவைத்து, அந்தப் போராட்டத்திற்கு ஆதரவான கருத்துக்களைக் கூறவைப்பது அதன் அடுத்த கட்ட வெற்றியாக அமைந்திருக்கும்.

உதாரணமாக, சந்திரசேகரன் கபினட் அந்தஸ்துள்ள ஒரு அமைச்சர். அரச பிரதிநிதியாக வடபகுதியில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்பவர். அவர் அங்கே வந்தார். அவர் சார்ந்த அரசாங்கம், அந்த அரசாங்கத்தின் அடித்தளமாக இருக்கும் ஜேவிபி என்பன இனப்பிரச்சினையில் அனைத்துலக ஈடுபாட்டை ஏற்றுக்கொள்ளாதவை. குறிப்பாக இறுதிக்கட்டப் போரில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை ஜேவிபி பலப்படுத்தியது. எனவே இன அழிப்புக்கு எதிரான நீதியைக் கேட்கும் ஒரு போராட்டத்தில் அவர்களை அனுமதிக்க முடியாது என்ற ஒரு விளக்கம் கூறப்படுகிறது. குறிப்பாக காலி முகத்திடலில் “அரகலய” போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு தமிழ்ச் செயற்பாட்டாளர் அவ்வாறு விளக்கம் கொடுப்பதை சமூக வலைத்தளங்களில் காணக்கூடியதாக உள்ளது. இன அழிப்பின் பங்காளிகளாக இருந்துவிட்டு இன அழிப்புக்கு எதிரான நீதியைக் கேட்டு அனைத்துலக சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் ஒரு போராட்டத்தில் ஆளுங்கட்சிக்கு இடமில்லை என்று கூறப்படுகின்றது. அதில் உண்மை உண்டு.

ஆனால் தமிழ் மக்கள் நீதிமான்களிடம்தான் நீதி கேட்கலாம் என்றால், இந்தப் பூமியிலே யாரிடமும் நீதி கேட்க முடியாது. ஏனென்றால் போர்த்துக்கீசரில் தொடங்கி ஆங்கிலேயர் வரை இலங்கையை ஆட்சி செய்த எல்லா புறத்தியாரும் தமிழ் மக்களிடம் ஏற்கனவே இருந்த அரசுகளை அழித்தவர்கள்தான். எனவே அவர்களுடைய கைகளில் தமிழ் ரத்தம் உண்டு. பிரித்தானியர் தமது ஆட்சித் தேவைகளுக்காக, ஆட்சித் தந்திரமாக தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் பிரித்து ஆண்டார்கள். முடிவில் சிங்கள மக்களிடமே அரசைக் கொடுத்து விட்டுச் சென்றார்கள்.

எனவே இனப்பிரச்சினைக்கு அவர்களும் காரணம். அதன்பின் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டத்திற்கு எதிராக பிரித்தானியா உட்பட பெரும்பாலான மேற்கு நாடுகள் அரசை ஆதரித்து ஆயுதங்களை வழங்கின. எனவே அவர்களுடைய கைகளில் ரத்தம் உண்டு.



(தொடர்ச்சி 21 பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ். மாநகரசபை கழிவகற்றல் முகாமைத்துவத்தில் பாரிய குறைபாடு தொடர்கின்றது என்கிறார் சபா குகதாஸ்!




யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட கழிவுகளை கல்லுண்டாய்ப் பகுதியில் கொட்டுவதில் ஏற்பட்ட முறைகேடு பாரிய பிரச்சினையாக புதிய உள்ளூராட்சி சபைகள் நடைமுறைக்கு வந்ததும் மாறியுள்ளதாக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆண்டுகளில் இருந்து கல்லூண்டாய்ப் பகுதியில் எரியூட்டப்படும் கழிவுகளால் வலி தென் மேற்கு பிரதேச சபையின் எல்லை மற்றும் வலி மேற்கு பிரதேச சபை எல்லைப் பகுதிகளில் வாழ்கின்ற பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர் இதனால் பல்வேறு வகையான நோய்கள் ஏற்பட்டு வருகின்றது.

யாழ். மாநகர கழிவகற்றல் செயற்பாடுகள் மாநகரசபையால் தனியாரிடம் கொடுக்கப்பட்டாலும் அதற்கான முகாமைத்தும் பல குறைபாடுகளை கொண்டிருப்பதன் காரணமாகவே கல்லூண்டாயில் பெரும் அவலம் ஏற்பட்டுள்ளது.

வீதிகளில், பொது இடங்களில் கழிவுப் பொருட்களை பொது மக்கள் இடுவதற்கு ஒவ்வொரு பிரிவாக வகைப்படுத்தப்பட்ட வர்ணப் பொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன ஆனால் அவற்றை சேகரித்து சென்று ஒரே இடத்தில் கொட்டப் பட்டு எரியூட்டப்படுகின்றது என்பது தான் பாதிக்கப்பட்ட மக்களின் குற்றச்சாட்டு.

நாள் தோறும் உரிய முறையில் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு சீர் செய்யப்படுமாயின் கல்லூண்டாயில் ஏற்படும் நெருக்கடிகளை தவிர்த்து பாதிக்கப்படும் மக்களுக்கு தீர்வினை வழங்கலாம்.

கண்லூண்டாயில் முன்பு இருந்த உப்பளம் கடந்தகால மாநகரசபையின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக குப்பை மேடைக்குள் மறைந்து நாறிப் போயுள்ளது.

பிரதான வீதியால் பொது மக்கள் செல்லும் போது கழிவகற்றல் வாகனங்கள் சிலவற்றின் நடைமுறைகள் அச்சத்தையும் அசௌகரியத்தையும் கொடுப்பதை மக்களின் முகம் சுழிப்பின் மூலம் உணர முடிகின்றது இவை முகாமைத்துவ குறைபாட்டின் வெளிப்பாடே ஆகும்.

புதிய மாநகரசபை பொறுப்புடன் கழிவகற்றல் முகாமைத்துவத்தை சீர் செய்வதன் ஊடாக உரிய முறையில் கழிவுகளை தரம் பிரித்து மீள் சூழற்சிப் பொறிமுறைக்கு உட்படுத்துவதன் மூலம் தீர்வினை நோக்கி நகர முடியும் என தெரிவித்தார்.



# யாழ்ப்பாணமாவட்டத்தில் வெள்ளை ஈ நோய்த் தாக்கத்திலிருந்து தென்னைகளை பாதுகாக்க 2 வார வேலைத்திட்டம்

## தென்னை பயிர்ச்செய்கை சபையின் தே.வைகுந்தன் தெரிவிப்பு

தென்னை பயிர்ச்செய்கையை பாதிக்கும் வெள்ளை ஈயின் தாக்கமானது அதிகரித்துள்ளது. அதனை கட்டுப்படுத்த இரண்டு வார வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். இதற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என தென்னை பயிர்ச்செய்கை சபையின் வடக்கு மாகாண பணிப்பாளர் தேவராஜா வைகுந்தன் தெரிவித்துள்ளார்.

3ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம், நல்லூரடியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னை உற்பத்தியில் வெள்ளை ஈயானது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தென்னை வளர்ப்பாளர்கள் பல்வேறு அசோகரியங்களை எதிர் நோக்குகின்றார்கள். வேறு மாகாணங்களில் வெள்ளை ஈயின் தாக்கம் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டாலும் வடக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அதன் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது.

இந்த வெள்ளை ஈயினை கட்டுப்படுத்துவதற்காக எதிர்வரும் 14ஆம் திகதியில் இருந்து இரண்டு வார வேலைத்திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்த உள்ளோம். அந்தவகையில் சாவாகச்சேரி, உடுவில், கோப்பாய், நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற 5 பிரதேச செயலர் பிரிவுகளில் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

மேற்குறித்த 5 பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த ஐந்து பிரதேச செயல பிரிவுகளிலும் உள்ள அனைத்து தென்னை மரங்களுக்கும் வெள்ளை ஈயினை கட்டுப்படுத்தும் திரவ கரைசலை விசிறவுள்ளோம். இதற்காக 200 விசிறும் இயந்திரங்களை பயன்படுத்த உள்ளோம். ஒரு இயந்திரத்தால் ஒரு நாளைக்கு 90 மரங்களுக்கு கரைசலை விசிற முடியும். அதற்கு ஏற்ப திட்டமிட்டுள்ளோம்.

இதனை முன்னெடுப்பதற்கு எமக்கு ஆளணி பற்றாக்குறை, உணவுப் பிரச்சினை, பணியில் ஈடுபடவுள்ளோருக்கான சம்பள கொடுப்பனவு பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவே இந்த பணியினை தனியாக அரசாங்கமோ அல்லது அரசாங்க உத்தியோகத்தர்களோ செய்ய முடியாது. மக்களும் எங்களுடன் கை கோர்த்தால் மாத்திரமே இந்த பணிகளை முன்னெடுக்க முடியும்.

இந்த பணியில் பங்கெடுக்க விருப்புவோர் சுயாதீனமாக வந்து பிரதேசங்களை தாண்டியும் உங்களது பங்களிப்பை வழங்கலாம். அடுத்த வீட்டில் அல்லது அடுத்த பிரதேசத்தில் தானே வெள்ளை ஈயின் தாக்கம் உள்ளது, எமது பகுதியில் இல்லை தானே என்று எண்ணாதீர்கள். அது உங்களது பகுதியிலோ அல்லது உங்களது வீட்டிலோ உள்ள தென்னைகளையும் பாதிக்கலாம். எனவே இதனை ஒழிப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# புத்தளம் வென்னப்புவப் பகுதியில் கஞ்சா கடத்தல்காரர்களிடம் இருந்து கைத் துப்பாக்கிகள் மீட்பு





**- ந.லோகதயாளன்**

புத்தளம் வென்னப்புவப் பகுதியில் 202 மில்லியன் ரூபா பெறுமதியிலான 900 கிலோ கஞ்சா மற்றும் கைத் துப்பாக்கிகள் சகிதம் மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடல் வழியாக கடத்தி வரப்பட்ட பெரும் தொகை கஞ்சா வாகனத்தில் தெற்கிற்கு கடத்தப்படவுள்ளதாக கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பெயரில் 900 கிலோ கஞ்சாவை கடற்படையினர் கைப்பற்றியதோடு இவற்றை கடத்த முயன்ற இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டதோடு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து இரு கைத் துப்பாக்கிகளும. கைத் துப்பாக்கிகளிற்கு பயன்படுத்தப்படும் 40 தோட்டாக்களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

# செம்மணியில் 40 மனித எலும்புத் தொகுதியுடன் 2 ஆவது குழியும் அகழ்வு ஆரம்பம்



**- நடராசாலோகதயாளன்**

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 40 எலும்புக் கூடுகள் காணப்பட்டுள்ளதோடு இரண்டாவது புதைகுழி அகழ்வுப் பணியும் புதன்கிழமை 2ம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்-செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அழ்வுப் பணிகளின் எட்டாம் நாள் அகழ்வு 2ம் திகதி இடம்பெற்றது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை மொத்தமாக 40 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. நேற்று வரையான அகழ்வின்போது மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட பகுதியில் இருந்து என்புத் தொகுதிகளுடன் ஆடை மற்றும் நீலநிற யுனிசெப் துணி கைப்பை ஒன்று என்பவற்றுடன் சிறுவர்களிற்கான மகிழ்வு பொம்மை ஒன்றும் காணப்பட்டுள்ளது.

இதுவரை அகழ்வின்போது என்புத் தொகுதிக்கு அருகில் ஆடை, சிறிய கண்ணாடி வளையல்களும், எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நீலநிற துணி கைப்பைஒன்றும் அடையாளம் காணப்பட்டது.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் யுனிசெப் தொண்டு நிறுவனங்களால் நிவாரணமாக பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது.

மனிதப்புதைகுழி அமைந்திருக்கும் இடத்தில் மண் மாதிரிகளை பரிசோதனை செய்வதற்காக சட்ட வைத்திய அதிகாரிகளினால் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றம் அதற்கான அனுமதியை வழங்கியிருந்தது. அதன்பிரகாரம் மண்மாதிரிகளை பரிசோதனை செய்வதற்காக கொழும்பிலிருந்து ஒரு குழு வருகைதந்து மண் மாதிரிகளை பெற்றுக்கொண்டுள்ளது.

செய்மதிப்படங்கள் மூலம் மேலும் புதைகுழிகள் இருக்கலாம் என சில இடங்கள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்கப் பட்டிருந்தன. அந்த இடங்களும் நீதிமன்ற உத்தரவுக்கமைய நேற்றையதினம் அகழப்பட்டமை குறிப்பிடதக்கது.



நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றமை குறிப்பிடதக்கது.

அன்றைய தினம. புதிதாக அகழப்பட்ட இடத்தில் ஒரு அடி அகழ்வதற்கு முன்பாகவே பெண்களின் சேலை வெளிவருகின்றமை மேலும் சந்தேகத்தை ஏற்டுத்தியுள்ளது.

# மன்னார் நகர முதல்வர் – அரசாங்க அதிபருக்கிடையில் விசேட சந்திப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



(01-07-2025)

மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் 01-07-2025 அன்று செவ்வாய் காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு விஜயம் செய்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் அவர்களுடன் விசேட சந்திப்பை மேற்கொண்டார்.

இதன் போது மன்னார் நகர சபை பிரிவில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள்,மன்னார் நகர சபை பிரிவில் கண்டறியப்பட்ட குறைகள், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட பட்டதோடு, முன்னெடுக்கப்பட உள்ள வேலைத்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த சந்திப்பின் போது மன்னார் நகர சபை செயலாளர் லோகேஸ்வரன் மற்றும் நகரசபை உறுப்பினர் செபமாலை ஆரோக்கியநாதன் பிகிறாடோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# "இலங்கையின் சிறைச்சாலை சாம்ராஜ்யம்"

## சிறைகளுக்குள் ஒவ்வொரு நாளும் எத்தனை சித்திரவதைகள் செய்யப்படுகின்றன?



இலங்கையில் கைதிகள் மற்றும் விடுதலையானவர்கள் இருவரையும் குறிவைத்து நடக்கும் பல அட்டூழியங்களுக்குப் பின்னால் சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு உள்ளதாக கைதிகளின் உரிமைகளுக்காக செயற்படும் அமைப்பின் முன்னணி ஆர்வலர் ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவை "கைதிகளை நசுக்குவதற்குப் பொறுப்பான ஒரு பிரிவு" என அழைக்கும் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவின் ஒருங்கிணைப்பாளர் சுதேஷ் நந்திமால், அந்தப் பிரிவால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நடவடிக்கைகள் அரச அதிகாரிகளால் அங்கீகரிக்கப்படுவது, அந்த நிலைமையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ளதாக குறிப்பிடுகின்றார்.

"சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு இயங்கினால், அது கைதிகளுக்கு பாதுகாப்பை வழங்கும் வகையில் இருக்க வேண்டுமேத் தவிர கைதிகளை நசுக்கவோ அல்லது சித்திரவதை செய்யும் நோக்கிலோ அல்ல", எனக் குறிப்பிடும் சுதேஷ் நந்திமால் உண்மையில் இதற்கு நேர்மாறாக இடம்பெறுவதாக சுட்டிக்காட்டுகிறார்.

"இலங்கை சிறைகளுக்குள் ஒவ்வொரு நாளும் எத்தனை சித்திரவதைகள் செய்யப்படுகின்றன? கைதிகளைத் தாக்குவது மிகவும் பொதுவானதாகவும் சாதாரணமாகவும் மாறிவிட்டது. சிறை நிர்வாகம் அத்தகைய சித்திரவதைகள் அனைத்தையும் மூடிமறைப்பதோடு, இந்தக் குற்றங்களை நியாயப்படுத்துகிறது."

நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறையில் அடைக்கப்படும் கைதிகளை மாத்திரமல்ல, தண்டனை காலம் முடிந்து விடுவிக்கப்படுபவர்களையும் குறிவைத்து, புலனாய்வுப் பிரிவு பல்வேறு சித்திரவதை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவின் ஒருங்கிணைப்பாளர் குற்றம் சாட்டுகிறார்.

"சில கைதிகள் விடுவிக்கப்படும்போது சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு அவர்களைப் பின்தொடர்கிறது என்பதில் எங்களுக்கு கடுமையான சந்தேகங்கள் உள்ளன. புலனாய்வுப் பிரிவு மூலம் கடத்தல்கள் மற்றும் சில கொலைகள் நடைபெறுகின்றன என்பதில் எங்களுக்கு நியாயமான சந்தேகங்களும் உள்ளன. சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட சில கைதிகள் காணாமல் போன வழக்குகளும் உள்ளன. அந்த காணாமல் போன சம்பவங்களில் புலனாய்வுப் பிரிவு ஈடுபட்டுள்ளது என்பதை நிராகரிக்க முடியாது," என சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவை கடுமையாகக் குற்றம் சாட்டிய சுதேஷ் நந்திமால், சிறைச்சாலைகளைச் சுற்றி ஒரு தனி சாம்ராஜ்யம் இருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களம் அலுவலகம் தற்போது கூறுவது ஒரு புதிய கண்டுபிடிப்பாக இருக்கலாம் எனவும், ஆனால் சிறையில் அடைக்கப்பட்டவர்களுக்கு அது பொருந்தாது எனவும் வலியுறுத்துகின்றார்.

ஜனாதிபதி மன்னிப்பை பயன்படுத்தி கைதிகளை மோசடியாக விடுவித்த குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்ற விசாரணையின் போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், சிறைச்சாலையின் உயர் அதிகாரிகளை "சிறைச்சாலைப் பேரரசின் மன்னர்கள்" என அழைத்தார்.

இலங்கை சிறைச்சாலை அமைப்பு, அதன் நிர்வாகம் மற்றும் அனைத்து நடவடிக்கைகளும் கைதிகளை துஷ்பிரயோகம், சித்திரவதை மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு ஆளாக்கும் வகையில் மூலோபாய ரீதியாகவும் கட்டமைப்பு ரீதியாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளதாக சுதேஷ் நந்திமால் சுட்டிக்காட்டுகிறார்.

# வயது வந்தவர்களுக்கிடையேயான ஒரே பாலின தொடர்பை குற்றமற்றதாக்கும் திருத்தங்களைச் செய்யும் சட்டம் தொடர்பான விடயம்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையை நிராகரித்த அரசு!




ஒரே பாலினத்தர்களின் பாலியல் தொடர்பை குற்றமாக்கும் தண்டனைச் சட்டக் கோவையின் சட்டப் பிரிவுகளை திருத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணையை அரசின் சட்ட வரைபாக ஏற்றுக்கொள்ளுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரையை, அரசாங்கம் ஏற்கத் தயாராக இல்லை எனக் கூறப்படுகிறது.

இலங்கைக்கு தனது மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் முடிவில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் தெரிவிக்கையில், ஒரே பாலின உறவுகளை குற்றமற்றதாக்குவதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

"ஒரே பாலின உறவினை குற்றமற்றதாக்குவதற்கான மசோதா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது எனது புரிதல். அது விரைவில் நிறைவேற்றப்படும் என்று நம்புகிறேன்."

உயர்ஸ்தானிகரின் கருத்துதுக்கு பதிலளித்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார, அத்தகைய சட்ட வரைபு எதுவும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை எனக் கூறினார்.

"அமைச்சின் நிகழ்ச்சி நிரலில் எந்தவொரு உத்தியோகபூர்வ நிலைமையிலும், ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அத்தகைய வரைபு எதுவும் இல்லை," என அவர் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு குறிப்பிட்டுள்ளார்.

ஒரே பாலினத்தவர்களுக்கிடையேயான பாலியல் தொடர்பை குற்றமாக்கும் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 365 மற்றும் 365A-வை இரத்து செய்ய/ திருத்துவதற்கான தனிநபர் பிரேரணையை அரசாங்க பிரேரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு 2025 மே 22 அன்று எழுதிய கடிதத்தில் பரிந்துரைத்தது.

வயது வந்தவர்களுக்கிடையேயான ஒருமித்த ஒரே பாலின பாலியல் தொடர்பை குற்றமற்றதாக்க தேவையான திருத்தங்களைச் செய்ய சட்டத்தை திருத்துவதற்கான தனிநபர் பிரேரணையை அப்போதைய அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் தொலவத்த நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தினார். இது பின்னர் ஒரு சட்ட வரைபாக அறிமுகப்படுத்தப்பட்டது.

ஏப்ரல் 4, 2023 அன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தண்டனைச் சட்டக்கோவை (திருத்த) வரைபு, ஏப்ரல் 26, 2024 அன்று நாடாளுமன்றக் குழு இல 08 இல் நடைபெற்ற நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது.

அப்போது தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தற்போதைய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவும், நாடாளுமன்றத்தின் தனிநபர் பிரேரணைக்கு தனது ஆதரவைத் தெரிவித்திருந்தார்.

சட்டத்தரணி பிரேமநாத் தொலவத்த செப்டம்பர் 23 அன்று இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று ஜனாதிபதியாக பதவியேற்ற அனுர குமார திசாநாயக்க, செப்டெம்பர் 24,2024 அன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நாடாளுமன்றத்தைக் கலைத்ததன் மூலம் இந்த பிரேரணை செல்லுபடியற்றதாகிவிட்டது.



இந்த பிரேரணையை தாமதமின்றி நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்த கோரிக்கைக்கு அரசாங்கம் உத்தியோகபூர்வ பதிலை அளித்துள்ளதா என்பது தெரியவில்லை.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

புு. கஜிந்தன்

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய உயர்திருவிழா தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் அறிவிப்பு!

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உயர்திருவிழாவானது எதிர்வரும் 26.06.2025 ஆந் திகதி தொடக்கம் 11.07.2025 ஆந் திகதிவரை நடைபெறவுள்ளது.

இவ் உயர் திருவிழா தொடர்பாக அரசாங்க அதிபர் தலைமையில் 17.06.2025 ஆந் திகதி மாவட்டச்செயலகத்தில் இடம்பெற்ற முன்னாயத்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்ட பின்வரும் விடயங்களை யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பொதுமக்களின் நலனுக்காக வெளியிட்டுள்ளார்.

போக்குவரத்து

1. படகுச் சேவை

குறிகட்டுவான் இறங்குதுறையிலிருந்து படகுச் சேவையானது 26.06.2025 ஆந் திகதி தொடக்கம் 11.07.2025 ஆந் திகதி வரை மு.ப 6.00 மணி தொடக்கம் பி.ப 6.00 மணி வரை அரை மணித்தியாலத்திற்கு ஒரு தடவை என்ற அடிப்படையில் சேவையில் ஈடுபடும்.

2. பேரூந்துச் சேவை

இலங்கை போக்குவரத்துச் சபையின் பேரூந்தானது யாழ்ப்பாண பேருந்து தரிப்பிடத்திலிருந்து மு.ப 5.30 மணி தொடக்கம் இறுதி படகுச் சேவைக்கமைய சேவையில் ஈடுபடுவதுடன், அரை மணித்தியாலத்திற்கு ஒரு தடவை என்ற அடிப்படையிலும் சேவையில் ஈடுபடும்.

திருவிழா காலங்களில் பேரூந்தானது மு.ப 4.30 மணிக்கு யாழ்ப்பாண பேரூந்து தரிப்பிடத்திலிருந்து புறப்படும். அத்துடன் இரவு பேருந்து சேவையானது படகுச் சேவைக்கமைய சேவையில் ஈடுபடும்.

3. குறிகட்டுவான் இறங்குதுறை பகுதியிலும் அதற்கு முன்னான வீதி ஓரங்களிலும் வாகனங்கள் தரிப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. வாகனங்கள் அடியார்கள் மற்றும் பொதுமக்களை இறக்கிவிட்டு வாகனங்களுக்கென ஒதுக்கப்பட்ட தரிப்பிடத்தில் தரிக்கப்படவேண்டும். இந் நடைமுறையினை கடைப்பிடிக்காதவர்கள் மீது பொலிஸாரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. 24.06.2025 ஆந் திகதி தொடக்கம் 12.07.2025 ஆந் திகதி வரை குறிகட்டுவானிலிருந்து நயினாதீவிற்கு கட்டட பொருட்கள் வங்களாவடி இறங்குதுறைக்கு கொண்டு செல்லப்படலாம். குறிகட்டுவானிலிருந்து பி.ப 2.00 மணிக்கு பின்னர் கட்டடப்பொருட்களை ஏற்றிச்செல்ல அனுமதி வழங்கப்படுவதுடன் இறுதி 04 திருவிழா காலங்களில் கட்டடப்பொருட்கள் எடுத்துச்செல்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.



அன்னதானம்

அடியார்களுக்கான மதிய மற்றும் இரவு உணவானது அமுதசுரபி அன்னதான சபையினரால் திருவிழா நாட்களில் வழங்கப்படும்.

பாதுகாப்பு ஏற்பாடு

பொலிஸார் சீருடை மற்றும் சிவில் உடைகளில் கடமையில் ஈடுபடுவார்கள். மேலும் பொதுமக்கள், அடியார்கள் தங்களது பெறுமதிமிக்க பொருட்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள் ஆவர்.

தண்ணீர்ப்பந்தல்

ஆலய வளாகத்தில் தண்ணீர்ப்பந்தல் அமைக்க விரும்பும் அடியார்கள் மற்றும் பொதுநலன்விரும்பிகள் பொது சுகாதார பரிசோதகரை தொடர்புகொண்டு அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.

திருவிழா காலங்களில் ஆலய வளாகத்தில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையினை முற்றாக தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

ஆலயத்திற்கு முன்புறமாக உள்ள தற்காலிக கடைகள் அகற்றப்பட்டு பொருத்தமான இட ஒதுக்கீடு செய்யப்படும்.



# வடக்கு ஆளுநருக்கும் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்ற ராசிக குமாரவுக்கும் இடையில் சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் ராசிக குமாரவுக்கும் இடையிலான சம்பிரதாயபூர்வ சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் 26ம் திகதி அன்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

சந்திப்பின்போது வடக்கு மாகாண ஆளுநரால் கடந்த ஆண்டு விவசாயத் தேவைக்காக விடுவிக்கப்பட்ட மக்களின் காணிகளுக்கு அண்மையாக அமைந்துள்ள இராணுவ வேலியை பின்நகர்த்துவதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்குரிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாத போதிலும் தற்காலிக பின்னரங்க வேலியை அமைக்கப்பட்டு வருவதாகவும் ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

மேலும், மக்களிடம் காணிகளை மீளக்கையளிக்கும்போது அங்கு களவுகள் இடம்பெறுவதாக மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர் அதற்கு அமைவான பாதுகாப்பு முன்னேற்பாடுகளுடன் அவற்றைக் கையளிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரினார்.

வடக்கில் நிலவும் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை தொடர்பிலும் இராணுவத் தளபதி ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார். உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு நிலையத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பின் இறுதியில் நினைவுச் சின்னங்களை ஆளுநரும், இராணுவத் தளபதியும் பரிமாறிக்கொண்டனர்.

# அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக வாக்குறுதி வழங்கி ஆசனமேறிய அரசு அதை நிறைவேற்ற தவறியது என கோமகன் ஆதங்கம்!

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து, குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் மு.கோமகன் 26ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தார்.

அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில், 30 வருடங்களாக சிறையில் வாடிக்கொண்டு இருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக குரல் அற்றவர்களின் குரல் அமைப்பானது தொடர்ச்சியாக தனது பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அந்தவகையில், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு வருகை தந்திருந்த நேரம் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான கோரிக்கைகள் உள்ளடங்கிய கடிதம் மற்றும் அவர்களுடைய பெயர் பட்டியலை கையளித்திருந்தோம்.

அத்துடன் கடந்த தை மாதம் 8ஆம் திகதி இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோருக்கு மின்னஞ்சல் ஊடாக இந்த கோரிக்கை கடிதத்தை அனுப்பி வைத்திருந்தோம். அதன் தொடர்ச்சியாக கடந்த பங்குனி மாதம் பிரதமரை சந்தித்து, இது குறித்து அவருடன் கலந்துரையாடி பெயர் பட்டியலையும் கையளித்திருந்தோம். இதனையும் ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு தெரியப்படுத்தியிருந்தோம். இதன் மூலம் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற செய்தியையும் கூறினோம்.

இந்த அரசானது அரசியல் கைதிகளை விடுவதாக வாக்குறுதி வழங்கி ஆசனமேறியது. ஆனால் இதுவரைக்கும் ஒரு அரசியல் கைதிகூட இதுவரை விடுதலை செய்யப்படவில்லை என்பது தொடர்ச்சியாக ஏமாற்றத்தை தருகின்றது.

தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் இருக்கும்போது, கடந்த காலத்தில் தற்போதைய ஜனாதிபதியை நேரில் தொடர்புகொண்டு கதைத்தவேளை தாங்கள் ஆட்சிக்கு வந்து 24 மணிநேரத்தில் விடுதலை செய்யப்படுவார்கள் என வாக்குறுதி அளிக்கப்பட்டவர்கள் இன்று சாட்சிகளாக இருக்கின்றனர்.

அதேநேரம் அமைச்சர் சந்திரசேகரனை நேரில் சந்தித்து கைதிகளின் விடுதலை தொடர்பாக கோரிக்கை முன்வைத்திருந்தவேளை எங்களை விட தாங்களே கைதிகளின் விடயத்தில் அதிகம் கவனம் எடுப்பதாகவும், கடந்த காலங்களில் இந்த அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக வலுவான கோரிக்கை முன்வைத்து வந்ததாகவும் கூறினார். ஆனால் அதிகாரம் அவர்களிடம் கிடைத்தும்கூட கைதிகளின் விடுதலை என்பது சாத்தியப்படவில்லை.

30 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் மீதமாக 10 தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் வாடுகான்றார்கள். போர் நிறைவுற்று 16 ஆண்டுகள் கழிந்துள்ள இந்த காலத்தில் எமது நாட்டில் வாழக்கூடிய ஒரு நல்லெண்ண சூழலை உருவாக்க வேண்டும் என கோரிக்கையை முன்வைக்கின்றோம் என்றார்.

# யாழ்ப்பாணம் – வடமராட்சியில் நடைபெற்ற மாபெரும் வர்த்தக சந்தை!




யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, போக்கறுப்பில் 26ம் திகதி அன்று நடைபெற்ற மாபெரும் வர்த்தக சந்தை காலை 9 மணியளவில் ஆரம்பமானது. இச் சந்தையானது வடக்கு மாகாண தொழிற்துறை திணைக்களம் மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் நிதிப் பங்களிப்பில் இடம்பெற்றது.

நிகழ்வானது விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு, மங்கள விளக்கேற்றி, வரவேற்பு நடனத்துடன் தமிழர் பாரம்பரிய முறைப்படி இடம்பெற்றது.

இச் சந்தை நிகழ்வில் வடமராட்சி கிழக்கு உள்ளூர் வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் தமது கைவினை பொருட்கள் மற்றும் உலர் உணவுகள், மரக்கறி வகைகள், ஆடைகள் என்பவற்றை காட்சிப்படுத்தி தமது வர்த்தக நடவெடிக்கைகளை மேற்கொண்டனர்.



இவ் நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் திரு. குமாரசாமி பிரபாகரமூர்த்தி, சமூர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் கணைச்செல்வன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24








## Toronto சிட்டி கவுன்சிலர்

# PAUL AINSLIE

WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

## HELP IS AVAILABLE

**வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.**

| | |
|---|---|
| குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி | **Ontario Works** |
| **விலங்கு சேவைகள்** | வாகனத் தரிப்பிடங்கள் |
| உயர்மாடி கட்டட சட்டங்கள் | **பூங்காக்கள்** |
| **கட்டட அனுமதி பத்திரங்கள்** | காவல் துறை |
| பிள்ளை பராமரிப்பு சலுகை | **பொதுச் சுகாதாரம்** |
| **அவசர வீட்டு வசதிகள்** | வீதிகள் |
| தீயணைப்பு சேவைகள் | **ஆதன வரிகள்** |
| **கழிவுப் பொருட்கள் சேவை** | பொதுப் போக்குவரத்து |
| நூலகச் சேவை | **மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்** |
| **மாநகரத் தேர்தல்** | மரங்கள் |
| மாநகர அனுமதியும் சட்டங்களும் | **நீர் விநியோகம்** |

| நியமன அலுவலகம் | ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம் |
|---|---|
| Scarborough Civic Centre<br>150 Borough Drive, 2nd Floor<br>Scarborough, ON M1P 4N7<br>Phone: 416-396-7222<br>Fax: 416-392-4006 | 100 Queen Street West,<br>2nd Floor - Suite C52<br>Toronto, ON M5H 2N2<br>Phone: 416-392-4008<br>Fax: 416-392-4006 |

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

**www.paulainslie.com** **416-396-7222**


# மரண அறிவித்தல்

**பிறப்பு: 29 MAR 1952** **இறப்பு: 01 JUL 2025**



**திருமதி இந்திராணி கந்தசாமி**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், Philippines, Tanzania, Canada ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இந்திராணி கந்தசாமி அவர்கள் 01-07-2025 செவ்வாய்க்கிழமை அன்று இயற்கை எய்தினார்.
அன்னார், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் அன்னலட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,.

கந்தசாமி (கந்தா-Agriculture Department Srilanka> UNDP Tanzania> TESOC Canada) அவர்களின் அன்பு மனைவியும்,.
தாரணி (Canada), திருக்குமரன் (Canada, UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,.
காலஞ்சென்ற குலேந்திரன், செல்வராணி (சாவகச்சேரி), காலஞ்சென்ற கெங்காதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,.

விஜேந்திரன், தமிழினி ஆகியோரின் அன்பு மாமியாரும்,.
நிவிதா, டிலானி, சந்தோஷ், சந்தியா ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,.
துஷியந்தி, மிதுலா, யுரேன், குயா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார். RIPBOOK ஊடாக இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
தகவல்: குடும்பத்தினர்

**நிகழ்வுகள்:**
**பார்வைக்கு:** Sunday, 06 Jul 2025 - 5:00 PM to 9:00 PM at Chapel Ridge Funeral Home & Cremation Centre - 8911 Woodbine Ave. Markham ON L3R 5G1
**பார்வைக்கு:** Monday, 07 Jul 2025 - 7:30 AM to 8:00 AM at Chapel Ridge Funeral Home & Cremation Centre
**கிரியை:** Monday, 07 Jul 2025 - 8:00 AM to 10:00 AM at Chapel Ridge Funeral Home & Cremation Centre
**தகனம்:** Monday, 07 Jul 2025 - 10:30 AM to 11:00 AM at North Toronto Crematorium - 2 Stalwart Industrial Dr. Gormley, ON L0H 1G0

**தொடர்புகளுக்கு**
**கந்தசாமி - கணவர்: 416-286-3671**
**தாரணி (Tara) - மகள்: 416-889-5446**
**திருக்குமரன் (Kumaran) - மகன்: 416-289-3671 / 416-996-367**


கோண்வோல் சிவன் ஆலயம் - கனடா
CORNWALL SHIVAN TEMPLE - CANADA
தெய்வத் திரு. சண்முகலிங்கம் வேலாயுதபிள்ளையின் ஆசீர்வாதத்துடன்
மஹோற்சவ விஞ்ஞாபனம் 2025
15 யூலை 2025 முதல் 26 யூலை 2025 வரை
கொடியேற்றம் 15.07.2025 செவ்வாய்க்கிழமை
சப்பிரத் திருவிழா 22.07.2025 செவ்வாய்க்கிழமை
தேர்த் திருவிழா 23.07.2025 புதன்கிழமை
தீர்த்தத் திருவிழா 24.07.2025 வியாழக்கிழமை
பூங்காவனம் 25.07.2025 வெள்ளிக்கிழமை
வைரவர் மடை 26.07.2025 சனிக்கிழமை
CORNWALL SHIVAN TEMPLE CANADA
தேர்த் திருவிழாவிற்கு
Toronto,mississauga, Brampton வில் இருந்து பஸ் சேவைகள் நடைபெறவுள்ளதால்
முற்பதிவிற்கு அழையுங்கள் ( கட்டணம் இருவழிச்சேவைக்கு $20)
416-564-9642
www.cornwallshivan.ca
1730 Vincent Massey Dr, Cornwall, ON K6H 5R6

# முகம் தெரியாத “நெருப்பு மனிதர்கள்”

***“கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்பு கவசங்கள். எமது போராட்ட பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனோபலத்தால் உடைத்தெறியும் நெருப்புமனிதர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள். ஒரு கரும்புலிவீரன் தன்னைவிட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக் கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான்.” ------------------------------------------- - கே. பாலா ----***



கரும்புலி கப்டன் மில்லர்
வல்லிபுரம் வசந்தன்
யாழ்ப்பாணம்
05.07.1987 நெல்லியடி மகா வித்தியாலயத்தில்
அமைந்திருந்த இராணுவ முகாம் தாக்குதல்

கரும்புலிகளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜுலை 5ஆம் திகதி கடைப்பிடிக்கப்படும் நினைவு நாளே கரும்புலிகள் நாள். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் 5ஆம் திகதி கரும்புலி கப்டன் மில்லரின் வடமராட்சி நெல்லியடி இராணுவ முகாம் மீதான தாக்குதலுடன் கரும்புலிகள் சகாப்தம் தொடங்கியதையிட்டே தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் 05.07.1993 அன்று ஜுலை 5ஆம் திகதி கரும்புலிகள் நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து யாழ் குடா நாட்டை கைப்பற்றுவதற்காக இலங்கை இராணுவத்தினரால் 1987ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட மிகப்பாரிய ஒப்ரேஷன் லிப்ரேஷன் இராணுவ நடவடிக்கை காரணமாக புலிகள் இராணுவ ரீதியான சவால்களை எதிர்கொண்ட வேளையில் அதனை முறியடிப்பதற்காக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனினால் தற்கொலைத் தாக்குதல் தந்திரோபாயம் திட்டமிடப்பட்டது. அதனடிப்படையில் கரும்புலியாக சென்று தங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்ள திலீபன் உட்பட புலிகளின் மூத்த தளபதிகள் பலர் போட்டியிட்ட போதிலும் மில்லர் என்ற போராளிக்கு அந்த வாய்ப்பு கிட்டியது.

1987 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 5ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நிலை கொண்டு குடாநாட்டை முற்றுகையிடுவதற்கான அடுத்த கட்ட தயார்படுத்தல்களை மேற்கொண்டு வந்த இலங்கை இராணுவத்தினர் மீது வெடிகுண்டு நிரப்பிய வாகனத்தில் சென்று கப்டன் மில்லரினால் கரும்புலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலின் மூலம் நூற்றுக்கு மேற்பட்ட இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டதையடுத்து குடாநாட்டை கைப்பற்றும் திட்டமும் இராணுவத்தினரால் கைவிடப்பட்டது. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இலங்கை இராணுவத்தினர் மீது மில்லர் கரும்புலித் தாக்குதல் நடத்தி இன்று 38 ஆண்டுகள் கடந்துவிட்டன.

05.07.1993 அன்று கரும்புலிகள் நாளை ஆரம்பித்து வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கையில், “ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய தினத்தில் முழு இலங்கைத்தீவையும் அதிர வைத்த ஓர் சம்பவம் நிகழ்ந்தது. எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது கரும்புலி வீரன் கப்டன் மில்லர் ஓர் ஒப்பற்ற சாதனையை நிலைநாட்டினான். எமது வீரவரலாற்றில் என்றுமே நிகழாத ஓர் அதிசயம் ஒன்று அன்று நிகழ்ந்தது. எதிரியின் அசைக்க முடியாத கோட்டையாகத் திகழ்ந்த ஓர் இராணுவ முகாமை இந்த இளம்புலிவீரன் தனித்த ஒருவனாகச் சென்று தகர்த்தெறிந்தான். ஒரு பெரிய படையணியாலும் செய்ய முடியாத பாரிய இராணுவ சாதனையை தனிமனிதனாகச் சென்று இவன் சாதித்து முடித்தான்.எரிமலையை சுமந்து சென்று எதிரியின் பாசறைக்குள் வெடிக்க வைத்தான். இந்தப் பூகம்பமான தாக்குதல் நிகழ்வு அன்றைய வரலாற்றுச் சூழ்நிலையையே மாற்றியமைத்தது. எதிரியின் சைனியங்கள் நிலைகுலைந்து பின்வாங்கின. ஒரு பெரிய படையெடுப்பின் பேரழிவிலிருந்து யாழ்ப்பாணம் தப்பிக் கொண்டது. தனிமனிதனாக எமது போராளி ஒருவன் தன்னை அழித்து தனது தேசத்தை பேரழிவிலிருந்து காப்பாற்றினான்.

பலவீனமான எமது மக்களின் பலம் வாய்ந்த ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்பு கவசங்கள். எமது போராட்ட பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனோபலத்தால் உடைத்தெறியும் நெருப்புமனிதர்கள். கரும்புலிகள் வித்தியாசமானவர்கள். அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும், பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள். ஒரு கரும்புலிவீரன் தன்னைவிட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக் கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான்.

பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. கோழைத்தனத்தின் தோழன். உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கு எல்லாம் மூலமானது மரணபயம். இந்த மரணபயத்தைக் கொன்று விடுபவன்தான் தன்னை வென்று விடுகிறான். அவன்தான் தனது மனச்சிறையிலிருந்து விடுதலை பெறுகிறான். கரும்புலிகள் பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்து விடுகிறது. மரணத்தின் நாளை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். சாவு பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. தம்மை அழிக்கும் அந்த இறுதி கணத்திலும் தம் இலக்கை அழிக்கும் நோக்கிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பர். இலட்சிய உறுதியில் அவர்கள் இரும்பு மனிதர்கள்.

மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே ஒரு போராட்ட வரலாற்றின் சக்கரத்தை சுழற்றுகிறது. பல கரும்புலி வீரர்கள் இன்று பெயர் குறிப்பிடாத கல்லறைகளில் அநாமதேயமாக உறங்கிய போதும் அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப் புகழ் பெற்றுவாழும்.முகத்தை மறைத்து, பெயரையும் புகழையும் வெறுத்து இலட்சிய மூச்சாக தமிழீழ விடுதலைக் காற்றுடன் கலந்துவிட்ட இந்த சரித்திர நாயகர்களை நான் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்” என்று குறிப்பிட்டிருந்தார்.

1987ஆம் ஆண்டு ஆரம்பமான கரும்புலிகளின் சகாப்தத்தில் 2007 ஜுன் 27 வரை வரை விடுதலைப் புலிகள் வெளியிட்ட உத்தியோக பூர்வ தகவல்களின் அடிப்படையில் 322 கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர். இவர்களில் 81 பேர் தரைக்கரும்புலிகளாகவும் 241 பேர் கடற்கரும்புலிகளாகவும் உள்ளனர். அதேவேளை இறுதி யுத்தம் இடம்பெற்று 2009ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி ஆயுதங்களை மௌனிப்பதாக விடுதலைப்புலிகள் புலிகள் அறிவிக்கும் வரையான காலப்பகுதியில் இன்னும் நூற்றுக்கணக்கான கரும்புலிகள் வீரச் சாவடைந்திருந்தனர்.

விடுதலைப் போராட்டப் பாதைகளில் தடைநீக்கிகளாகவே கரும்புலிகள் காணப்பட்டார்கள். எந்த ஆயுதங்களினாலும் வெற்றி கொள்ளப்பட முடியாததும் எந்த தொழில்நுட்பத்தாலும் தடுக்க முடியாததும் எந்த அரச, இராணுவ இயந்திரங்களினாலும் அடக்க முடியாததும் தான் கரும்புலிகளின் மனோபலம். தரை, கடல், வானம் என தமிழீழத்திற்கு உள்ளே, தமிழீழத்திற்கு வெளியே என எங்கெங்கு எல்லாம் எதிரிகள் இருந்தார்களோ அங்கங்கு வைத்தே அவர்களின் ஆணிவேர்களைப் பிடுங்கி தமிழ் மக்களின் தமிழீழ தாயக தாகத்தை இந்த உலகின் முற்றத்தில் பேரிடியாக முழங்கியவர்கள் கரும்புலிகள்.

எத்தனையோ கரும்புலிகள் தமது முகத்தையோ, முகவரியையோ, காட்டாமல், தமக்கென சுயநல பெருமை தேடாமல் தமிழ்த் தேசத்தின் இருப்பை நிலை நாட்ட அடையாளம் மறைத்து தமிழீழ விடுதலைக்கு தமது அர்ப்பணிப்பாலும் செயலாலும் தம்மை உரமாக்கி தமிழினத்தின் வரலாற்றில் தம்மை அழியாத அடையாளமாய் இட்டுச் சென்றுள்ளார்கள். இமாலய சாதனைகளை படைத்து வீரகாவியமாகி இன்றும் வெளியில் தெரியா வீர மறவர்களாக ஈழவரலாற்றுப் பக்கங்களில் மறைந்து கிடக்கும் தேசப்புயல்கள் கரும்புலிகள்.

விடுதலைப்புலிகளின் கரும்புலிகளின் படைப்பிரிவில் தரைக் கரும்புலிகள், கடற் கரும்புலிகள், வான் கரும்புலிகள், முகம் தெரியாக் கரும்புலிகள் என்ற 4 பிரிவுகள் இருந்தன. இந்த நான்கிலும் ஆண், பெண் கரும்புலிகள் உள்ளடங்கியிருந்தனர். தமிழீழ விடுதலைக்கான விடுதலைப்புலிகள் போராட்டத்தில் முதல் தரைக்கரும்புலித்தாக்குதல் 1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் 5ஆம் திகதி கரும்புலி கப்டன் மில்லரினால் வடமராட்டி நெல்லியடி இராணுவ முகாம் மீது நடத்தப்பட்டது. இராணுவ முகாம் நிர்மூலமாக்கப்பட்டதுடன் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கணக் கானவர்கள் காயமடைந்தனர்.

முதல் கடற்கரும்புலித் தாக்குதல் 10.07.1990 அன்று இலங்கை கடற்படைக்கு எதிராக முதல் கடற்கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோரால் வல்வெட்டித்துறை கடற்பரப்பில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினரின் P 715 “எடித்தாரா” கட்டளைக் கப்பல் மீது நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் அக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டதுடன் பல கடற்படையினர் கொல்லப்பட்டனர். முதல் வான் கரும்புலித் தாக்குதல் 20.02.2009 அன்று இலங்கை விமானப்படைத் படைத் தலைமையகம் மற்றும் கட்டுநாயக்கா விமானத்தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதல் வான் கரும்புலிகளான கேணல். ரூபன், லெப்.கேணல். சிரித்திரன் ஆகியோரால் நடத்தப்பட்டது.

வீரச்சாவடையும் கரும்புலிகளுக்கு இராணுவநிலையோடு அவர்களின் வீரச்சாவு அறிவிக்கப்படும். வித்துடல் இருந்தால் அதற்குரிய மரியாதையோடு விதைக்கப்படும். உடல் இல்லையென்றால் நினைவுக்கல் நாட்டப்படும். நினைவுநாட்களில் அவர்களின் பெயர், அடையாளங்கள் என்பன வெளிப்படுத்தப்பட்டு உரிய மரியாதையும், கௌரவமும் வழங்கப்பட்டு கல்லறையிலோ, நினைவுக்கல்லிலோ நினைவுகூரப்படுவர். ஆனால் இவையெதுவும் கிடைக்காமலும் பலர் போராட்டத்துக்காக உயிரை அர்ப்பணித்துள்ளனர். இவர்களின் பெயர்களோ தகவல்களோ வெளிவிடப்பட மாட்டாது. கல்லறைகளோ, நினைவுக்கற்களோ இவர்களுக்காக இருக்காது. மாவீரர் பட்டியலில் இவர்களின் பெயர்கள் இடம்பெறமாட்டாது. சம்பந்தப்பட்ட சிலருடன் மட்டும் உறங்கிப்போகும் உண்மைகள் இவர்கள். இவர்களே “முகம் தெரியாக் கரும்புலிகள்”.

இதேவேளை முதல் ஆண் தரைக் கரும்புலியாக 05-07-1987 ஆம் ஆண்டு கப்டன் மில்லரும் முதல் பெண் தரைக் கரும்புலியாக 10-06-1997 ஆம் ஆண்டு மேஜர் யாழினியும் முதல் ஆண் கடற்கரும்புலிகளாக 10.07.1990 ஆம் ஆண்டு மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகியோரும் முதல் பெண் கடற்கரும்புலியாக 16-08-1994 ஆம் ஆண்டு கப்டன் அங்கயற்கண்ணியும் முதல் ஆண் வான் கரும்புலிகளாக 20.02.2009 ஆம் ஆண்டு கேணல். ரூபன், லெப்.கேணல். சிரித்திரன் ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர்.

(தொடர்ச்சி 17 பக்கம்)



# உண்மையான பயங்கரவாதிகள் யார் என்பதை செம்மணி புதைகுழி அம்பலப்படுத்தி விட்டது என இயக்குனர் கௌதமன் சீற்றம்!



எமது ஈழ மண்ணின் உண்மையான பயங்கரவாதிகள் யார் என்பதை யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியானது வெளிப்படுத்தி விட்டது. குறித்த மனிதப் புதைகுழியில் கொடூரமாக கொலை செய்யப்பட்ட உறவுகளது எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்படுகின்ற சம்பவமானது அதிர்ச்சியையும் கடந்தகால அரசின் கோர முகத்தையும் எடுத்துக் காட்டுவதாக தென்னிந்திய பிரபல இயக்குனரும் தமிழ் பேரரசு கட்சியின் தலைவருமாகிய வ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இரண்டாவது கட்ட அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. 30-06-2025 அன்று வரையான அகழ்வுகளின்போது 33 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட பல எலும்புக்கூடுகள் கொடூர கொலை இடம்பெற்றதை ஆதாரப்படுத்துகின்றது.

அதாவது தாய் ஒருவர் சேயை அணைத்தவாறு ஒரு எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் சிறுவன் ஒருவனது எலும்புக்கூடானது புத்தகப் பையுடன் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆதாரங்களானது கடந்தகால அரசாங்கத்தின் கோர முகத்தை வெளிப்படுத்துகிறது.

குறித்த மயானமானது எரியூட்டப்படும் மயானமாகவே காணப்படுகிறது. இறந்தவர்களது உடல்கள் பொதுமக்களால் அங்கு புதைக்கப்படுவதில்லை. அத்துடன் குறித்த பகுதியானது யுத்த காலத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே காணப்பட்டது. ஆகையால் அந்தப் பகுதிக்குள் இராணுவத்தினரை மீறி எவரும் உள்ளே செல்ல முடியாது. ஆகையால் இந்த கொடூர கொலைகளை இலங்கை இராணுவமே மேற்கொண்டிருக்கும் என்ற கருத்தில் ஐயம் இல்லை.

நாட்டுக்காக போராடிய விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்றார்கள். தமிழ் மக்களையும் பயங்கரவாதிகளாக தென்னிலங்கை தேசத்துக்கு எடுத்துக் காட்டினார்கள். உண்மையான பயங்கரவாதிகள் யார் என்பதை இப்போது உலகம் அறிகிறது. அந்த புதைகுழியில் கண்டுபிடிக்கப்பட்ட தாயும் சேயும் என்ன பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள்? புத்தகப் பையுடன் கண்டுபிடிக்கப்பட்ட சிறுவன் என்ன பயங்கரவாத செயற்பாட்டில் ஈடுபட்டான்? தாய் மண்ணுக்காக போராடியவர்கள் பயங்கரவாதிகளா? அல்லது மண்ணின் உரிமைக்காக போராடிய இனத்தையே வேரோடு அழிக்க வேண்டும் என்ற கோர முகத்துடன் செயற்பட்டவர்கள் பயங்கரவாதிகளா? என்ற கேள்விக்கு செம்மணி மனிதப் புதைகுழியானது பதில் தந்துள்ளது.

இதுவரை 33 எலும்புக்கூடுகளே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் 600க்கு மேற்பட்டோரது எலும்புக்கூடுகள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. மீட்கப்பட்ட 33 எலும்புக்கூடுகளிலேயே இத்தனை கொடூரங்கள் வெளிப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள எலும்புக்கூடுகளில் இன்னமும் எத்தனை கொடூரங்கள் இருக்குமோ என நினைக்கும்போது அடி வயிறே பற்றியெரிகிறது.

யுத்தம் நிறைவுற்று 16 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். போராட்டங்களில் ஈடுபட்ட பலர் தமது பிள்ளைகளுக்கு அல்லது தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமலே வயது மூப்பினாலும் பல்வேறு காரணங்களாலும் உயிரிழந்துள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்ட தமது சொந்தங்களுக்கு என்ன நடந்தது என்று விடயத்தையாவது ஏனைய உறவுகள் தமது வாழ்க்கை காலத்தில் தெரிந்துகொள்ள வேண்டும். யுத்தம் நிறைவுற்று 16 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் ஏன் இந்த விடயங்களை அம்பலப்படுத்தவில்லை? இதிலேயே தெரிகிறது அவர்களது இனவாத முகம்.

என்னதான் மூடி மூடி மறைத்தாலும் உண்மைகள் எப்போதும் உறங்காது என்பதற்கு செம்மணிப் புதைகுழி ஒரு நல்ல உதாரணம். கடந்த காலத்தில் மோசடிகளில் ஈடுபட்ட அமைச்சர்களையும் அதிகாரிகளையும் தற்போதை அநுர அரசு தண்டிக்கிறது. அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் இந்த செம்மணி புதைகுழி விவகாரத்தில் அவர்களும் இனவாத கொள்கையில் செயற்படுகின்றார்களா? அல்லது அனைத்து இனங்களையும் சமமாக வழி நடத்துகின்றார்களா என்ற விடயம் செம்மணி புதைகுழி குறித்தான அவர்களது செயற்பாட்டில் தெரியவரும்.

பாதிக்கப்பட்ட எமது தொப்புள் கொடி உறவுகளுக்கு நீதி கிடைக்கும் காலம் கனிந்து வருகிறது என எனக்கு தோன்றுகிறது. இதனை நல்ல வாய்ப்பாக பயன்படுத்தி சர்வதேச சமூகங்களும், புலம்பெயர் உறவுகளும், தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளும் ஓரணியில் நின்று இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகித்து பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கிடைப்பதற்கு வழிசமைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி கிடைப்பதற்கு தொப்புள் கொடி உறவுகளாக நாம் எப்போதும் தோளோடு தோள் நிற்போம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



(16 பக்கத் தொடர்ச்சி)

## முகம் தெரியாத "நெருப்பு மனிதர்கள்"

விடுதலைப்புலிகளின் கரும்புலிப்படையணிகளின் தாக்குதல்களில் 02-08-1994 அன்று அதிகாலை யாழ்ப்பாணத்திலிருந்த பலாலி விமானப்படைத் தளம் மீது நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல், 24-07-2001 அன்று கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் மற்றும் விமானப் படைத்தளம் மீது நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல், 22-10-2007 அன்று அநுராதபுரம் விமானப் படைத்தளம் மீது நடத்தப்பட்ட "எல்லாளன்" கரும்புலித் தாக்குதல் என்பன முழு உலகத்தையும் அதிர வைத்த கரும்புலித் தாக்குதல்களாக அமைந்தன.

இதில் பலாலி விமானப்படைத் தளம் மீது நடத்தப்பட்ட கரும்புலித்தாக்குதலில் "பெல் 212" ரக ஹெலிகொப்டர். பவள் கவச வாகனம் என்பன அழிக்கப்பட்டதுடன் படையினர் சிலரும் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலில் 5கரும்புலிகள் வீரச் சாவடைந்தனர்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் மற்றும் விமானப் படைத்தளம் மீது நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதலில் இரண்டு எ (A) - 340 - 300 பயணிகள் விமானங்கள், ஒரு எ (A) - 330 -200 பயணிகள் விமானம், நான்கு கிபிர் போர் விமானங்கள், மூன்று கே (K) - 8 பயிற்சி விமானங்கள், இரண்டு எம்.ஐ.ஜி (MIG) - 27 ஜெட் போர் விமானங்கள், இரண்டு பெல் (bell) 412 ஹெலிகொப்டர்கள் இரண்டு வி.வி.ஐ.பி (VVIP) 412 ஹெலிகொப்டர்கள், இரண்டு எம்.ஐ (MI) - 17 ஹெலிகொப்டர்கள் அழிக்கப்பட்டதுடன் இரண்டு - A-320 பயணிகள் விமானங்கள், ஒரு - A-340 பயணிகள் விமானம், ஒரு அன்டனோவ் (Antonov) போக்குவரத்து விமானம், ஒரு எம்.ஐ (Mi) - 24 ஹெலிகொப்டர், ஒரு பெல் (Bell) 412 ஹெலிகொப்டர்,நான்கு கிபிர் போர் விமானங்கள் சேதமாக்கப்பட்டன.

இலங்கையின் சர்வதேச விமான நிலையத்திலும் அதனோடு இணைந்திருந்த விமானப்படைத்தளம் மீதும் இந்த கரும்புலித்தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் ஒரு பொதுமகனுக்கு கூட காயம் ஏற்படாத வகையில் நன்கு திட்டமிடப்பட்டு மிகத்துல்லியமாக கரும்புலித்தாக்குதல் நடத்தப்பட்டது. இது உலகலாவிய ரீதியில் பெரும் கவனம் பெற்றதுடன் இலக்கை மட்டுமே அழிக்கும் கரும்புலிகளின் திறனையும் உலகிற்கு வெளிச்சமிட்டது. இத்தாக்குதலில் 14 முகம் தெரியாக் கரும்புலிகள் வெற்றிக்கு வித்திட்டு காற்றில் கலந்தனர்.

அநுராதபுரம் விமானப் படைத்தளம் மீது நடத்தப்பட்ட "எல்லாளன்" கரும்புலித் தாக்குதலில் எம்.ஐ-24 ஹெலிகொப்டர்கள் - 2, எம்.ஐ-17 ஹெலிகொப்டர் - 1, பெல்-212 ஹெலிகொப்டர் - 1, பீச் கிராப்ட் விமானம் - 1, கே - 8 பயிற்சி விமானம் - 1 பிரி-6 ரக சண்டைப் பயிற்சி விமானங்கள் - 4 ஆளில்லா வேவு விமானம் - 3 என்பன அழிக்கப்பட்டதுடன் ஆளில்லா வேவு விமான ம்-1, மில் எம்.ஐ.-24 ரக யுத்த ஹெலிகொப்டர்-1,கே-8 ரக அதிவேக யுத்த பயிற்சி விமானங்கள்-5, பிரி-6 ரக சண்டைப் பயிற்சி விமானங்கள்-3. சியா மாசெட்டி ரக குண்டு வீச்சு விமானங்கள்-4 என்பன பாரியளவில் சேதமாக்கப்பட்டன.

இந்த தாக்குதலில் தரைக்கரும்புலிகளுடன் வான்புலிகளின் இரு விமானங்களும் விமானத்தளம் மீது குண்டு வீச்சு தாக்குதலை நடத்தியிருந்தன. இத்தாக்குதலில் 3 பெண் கரும்புலிகள் உட்பட 21 கரும்புலிகள் வீரச் சாவடைந்தனர். விமானப்படையினரில் உயரதிகாரிகள் உட்பட 14 பேர் கொல்லப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒவ்வொரு திருப்புமுனைகளிலும் கரும்புலிகளின் நாமம் உள்ளது இவ்வாறு எமது விடுதலைப் போராட்டத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்த கரும்புலிகளின் வீர வரலாறுகளைக் கூறிக்கொண்டே போக முடியும். பல ஆண்டுகளாக எதிரியின் மத்தியில் உலவி, தேசிய விடுதலையை மட்டுமே தமது தாரக மந்திரமாக தமக்குள் கொண்டு தமது இறுதி இலக்கில் உறுதி தளராமல், தமது பாதையில் எத்தடை வரினும் அதை உடைத்தெறிந்து தமது கடமையை செய்த நெருப்பு மனிதர்கள் கரும்புலிகள். பூகம்ப அதிர்வாக குமுறிய எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலகத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகள். சாவுக்கு விலங்கிட்டு புதிய சரித்திரம் படைத்து எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்ற தம்மை நெருப்பாக்கியவர்கள். அவர்களின் புனித தினமாகிய ஜூலை 5 ஆம் திகதி வரையப் படாத சித்திரங்களாகவும் எழுதப்படாத சரித்திரங்களாகவும் எமது வாழ்வுக்காக தமது வாழ்வைத் துறந்த அந்த அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்தி வணங்குவோம்.

# வெகு விமரிசையாக நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழா – 2025

## ஏழு சாதனையாளர்களுக்கு அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் மேடையில் சூழ்ந்து நிற்க அளிக்கப்பெற்ற உயர் கௌரவம்





கனடா உதயன் பத்திரிகை ஆரம்பிக்கப்பெற்று 10வது வெற்றிகரமான ஆண்டில் (1996) ஆரம்பிக்கப்பெற்ற நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழாவின் 19வது ஆண்டாக இவ்வாண்டின் விழா கடந்த 14ம் திகதி சனிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரில் உள்ள விழா மண்டபம் ஒன்றில் சிறப்பாக நடைபெற்றது.

கனடாவில் பல வர்த்தக முயற்சிகளில் ஈடுபாடு கொண்டு வெற்றிகரமாக இயங்கிவரும் வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் நிறுவனங்களின் ஆதரவிலும் அரசியல் மற்றும் சமூகத்தலைவர்களின் ஆசிகளோடும் மேற்படி விழா சிறப்பாக அரங்கேறியது.

இவ்வருடம் ஏழு சாதனையாளர்களுக்கு. அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் மேடையில் சூழ்ந்து நிற்க அளிக்கப்பெற்ற உயர் கௌரவத்தை கண்டு களித்த பார்வையாளர்கள் கரகோசம் செய்து தங்கள் பாராட்டுக்களையும் ஒப்புதல்களையும் அங்கீகாரத்தையும் வழங்கினார்.

இவ்வருடத்தின் விழாவில் உதயன் கலை இலக்கிய மேன்மை விருது: திருமதி. வசந்தா டேனியல் அவர்களுக்கும், உதயன் வர்த்தக வெற்றியாளர் விருது - ஒன்றாரியோ: திரு. தாமோதரம்பிள்ளை யோகநாதன் அவர்களுக்கும், உதயன் தலைமைத்துவ விருது: திருமதி. இந்திராணி நாகேந்திரம் அவர்களுக்கும், உதயன் வாழ்நாள் சாதனையாளர் விருது - இலங்கை: பத்திரிகையாளர் “வீரகேசரி” சந்திரலிங்கம் ஸ்ரீகஜன் அவர்களுக்கும், உதயன் வர்த்தக வெற்றியாளர் விருது - கியுபெக்: திரு. தங்கா இளையதம்பி அவர்களுக்கும், உதயன் இனங்களுக்கிடையிலான சமூக நல்லுறவு விருது: மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் (MPP Aris Babikian) அவர்களுக்கும் உதயன் இளையோர் அடையாள விருது: திருமதி. தசா குகன் அவர்களுக்கும் பெற்றன.

விழாவின் ஆரம்பத்திலிருந்து திருமதி. ஜனனி ஜெயரட்ணராஜா மற்றும் பிரான்ஸ் தேசத்திலிருந்து வருகை தந்திருந்த திரு. நாகேஸ்வரன் குருபரன் ஆகியோர் முறையே ஆங்கிலத்திலும் தமிழிலும் தொகுத்து வழங்கினார்கள்.

வரவேற்புரையை உதயன் விருது விழாக் குழு உறுப்பினர் மரியாம்பிள்ளை மரியராசா வழங்கினார். சிறப்புரைகளை சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள், பாஸ்டர் ஜெயானந்தசோதி, கலாநிதி பகாத் ஏ. மஜீத் ஆகியோர் நிகழ்த்தினர்.

அழைக்கப்பெற்றிருந்த மத்திய மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகரசபை உறுப்பினர்கள் என பத்துக்கும் மேற்படி அரசியல் தலைவர்களும் வர்த்தக சமூகத்தின் பிரதிநிதிகளாகவும் விழாவிற்கு அனுசரனை வழங்கியவர்களாகவும் அழைக்கப்பட்டவர்கள் மற்றும் கவிஞர்கள் எழுத்தாளர்கள் என அனைத்து தரப்பினரும் விழாவில் கலந்து கொண்டும் விருதாளர்களைப் பாராட்டியும் விருந்துண்டு மகிழ்ந்து இறுதியில் மகிழ்ச்சியோடு விடைபெற்றுச் சென்றனர்.

அத்துடன் சபையோரை மகிழ்விக்க நடனங்கள், பாடல் நிகழ்ச்சி, கர்நாடக இசைக் கச்சேரி, மற்றும் உடல் நலம் குன்றிய இளைய தலைமுறையினரின் பாடல் நிகழ்ச்சிகள் என பலவும் சபையோரை மகிழ்வித்தன.

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் உதயன் சர்வதேச விருது விழாவின் ஸ்தாபகருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது உரையில் தமது உதயன் பத்திரிகையை வாராவாரம் அச்சில் கொண்டு வரும் பணி என்பது சவால்கள் நிறைந்ததாக உள்ளதாகவும் அதை தொடர்ச்சியாக மேற்கொள்ள மாகாண மற்றும் மத்திய அரசாங்கங்கள் தரும் ஆதரவிற்கு நன்றி தெவித்தார். அத்துடன் உதயன் பத்திரிகை நிறுத்தப்பட்டால் சாதனையாளர்களை கௌரவிக்கும் விருது விழாவையும் தொடர்ந்து நடத்த இயலாமல் போய்விடும் என்ற தனது ஆதங்கத்தையும் வெளியிட்டார்.




































மேற்படி உதயன் சர்வதேச விருது விழா மேடையில் உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களின் சேவைகளைப் பாராட்டும் வகையிலும் கௌரவிக்கும் வகையிலும் பிரிட்டிஸ் மன்னரின் முடிசூட்டு விழாப் பதக்கமும் சான்றிதழும் கௌரவ ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சர் றேமண்ட் சோ அவர்களால் வழங்கப்பெற்றது.

அத்துடன், கனடாவில் அமையவிருக்கும் தமிழர் சமூக மையத்தின் கட்டட நிதிக்காக பலரும் வழங்கியது போன்று லோகேந்திரலிங்கத்தின் குடும்பம் மற்றும் அவரது பிள்ளைகள், மருமக்கள் ஆகியோர் சார்பில் பத்தாயிரம் டாலர்களுக்குரிய காசோலையும் தமிழர் சமூக மையத்தின் நிதிக்குழுத் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பெற்றது.

**செய்தி: சத்தியன்**

**படங்கள்: ரகு மற்றும் GTA கெங்கா - சைலோன் பாலன் மற்றும் Behind Me Media Group Inc ஆகியோர்**

Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI
## Pawn Brokers





30
வருட சேவைகள்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!

# கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகம்பிகைக்கு வாங்க...

**Pawn Bank Inc.**™
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

கனடிய செய்திகள் Canadian News

# கனடாவின் ஒன்றாரியோவில் உள்ள கோண்வோல் சிவன் ஆலயத்தில் கனடா தினமன்று நடைபெற்ற "இலட்ச்சார்ச்சனை ஆவர்த்தி" அபிசேகங்கள்

ரொறன்ரொ மற்றும் மொன்றியால் மாநகரங்களில் உள்ள சிவாச்சாரியப் பெருமக்கள் பத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டு நடத்திய "இலட்ச்சார்ச்சனை ஆவர்த்தி" அபிசேகங்கள் கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள கோண்வோல் சிவன் ஆலயத்தில் கனடா தினமன்று நடைபெற்றன. ஏராளமான அடியவர்கள் கலந்து சிறப்பித்த இந்த விசேட அபிசேகங்களில் பல பக்தர்கள் கலந்து சிறப்பித்து பெருமானின் அருள் பெற்றனர்.

அன்றைய தினம் ஆலயத்தின் அறங்காவல் சபைத் தலைவர் சிவரூபன் அவர்கள் உட்பட அங்கத்தவர்கள் மற்றும் தொண்டர்கள் என பலரும் மிகுந்த பக்தியோடு அனைத்து பூசை மற்றும் அபிசேகங்களில் பங்கெடுத்தனர்.







மேற்படி ஆலயம் 1730 VINCENT MASSEY DRIVE - CORNWALL K6H 5R6 என்னும் விலாசத்தில் அமைந்துள்ளது. ரொறன்ரோவிலிருந்து செல்கையில் 401 நெடுஞ்சாலைக்கு மிக அருகிலேயே ஆலயம் உள்ளது.

இங்கு எதிர்வரும் யூலை 15ம் திகதி தொடக்கம் யூலை 26ம் திகதிவரை வருடாந்த மஹோற்சவம் நடைபெறவுள்ளது. யூலை 23ம் திகதி தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் தொலைபேசி இலக்கம் - (416) 564-9642.

இங்கே உள்ள படங்கள் அன்றைய தினம் எடுக்கப்பெற்றவையாகும்.

**படங்கள்: சத்தியன்**

# தனது பிறந்த நாளில் இரண்டு சமூகப் பணிகளுக்கு குடும்பம் சார்ந்த நிதி அன்பளிப்பு வழங்கிய கனடா வர்த்தகர் கிருஸ்ணகோபால் செல்லத்துரை




கனடாவில் தனது முன்னேற்றமான வர்த்தகச் செயற்பாடுகள் மற்றும் சமூகப் பணிகள் ஆகியவற்றின் மூலம் நன்கு அறியப்பெற்றவராக விளங்கும் நண்பர் கிருஸ்ணகோபால் செல்லத்துரை அவர்களின் 65வது பிறந்தநாள் விழா அவரது குடும்பத்தினர் சார்பில் சிறப்பான ஏற்பாடுகளோடு ஸ்காபுறோ நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று 29ம் திகதி கொண்டாடப்பெற்றது.



அன்றைய தினம் அங்கு கலந்து கொண்ட அனைவராலும் பாராட்டப்பெற்ற அம்சங்களின் முக்கியமான இரண்டு நிதி அன்பளிப்புக்கள் இன்றும் பேசப்பெற்று வருகின்றன.

முதலாவது நிதி அன்பளிப்பாக தற்போது திட்டமிடப்பெற்று வரும் கனடாவில் அமையப் போகின்ற "தமிழர் சமூக மையம்" (Scarborough Tamil Community Centre) நிதிக்காக கிருஸ்ணகோபால் செல்லத்துரை அவர்களது குடும்பத்தினர் வழங்கிய பத்தாயிரம் கனடிய டாலர்களுக்குரிய மாதிரிக் காசோலை "தமிழர் சமூக மையம்" நிதிக்குழுவின் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்களிடம் ஒப்படைக்கப்பெற்றது.

மேலும், இரண்டாவது நிதி அன்பளிப்பாக தற்போது கிழக்கிலங்கையில் கனடா - முன்னாள் இலங்கை வர்த்தகர்கள் சங்கத்தின் சார்பில் மேற்கொள்ளப்பெற்று வரும் வீடற்றவர்களான பத்து வீட்டுத் திட்டத்தில் அடங்கும் ஒரு வீட்டுக்கான செலவுத் தொகையான ஐயாயிரம் கனடிய டாலர்கள் பெறுமதியான மாதிரிக் காசோலை கனடா - முன்னாள் இலங்கை வர்த்தகர்கள் சங்கத்தின் முக்கிய இயக்குனர்களிடம் மேடையில் கையளிக்கப்பெற்றது.

# மொன்றியால் வாழ் சில "கனடா உதயன்" நண்பர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் நடைபெற்ற சிறு சந்திப்பு



கடந்த செவ்வாய்க்கிழமையன்று 1ம் திகதி கனடிய தேசத்தின் பிறந்த நாளாக இருந்தாலும் கனடா வாழ் தமிழ் மக்களின் இரண்டாவது தளமாகத் திகழும் மொன்றியால் நகருக்கு நண்பர் ஶ்ரீஸ்கந்தராஜா அவர்களுடன் பயணித்திருந்தோம்.

கனடா உதயன் நிறுவனம் ரொறன்ரோவில் நடத்தும் எந்தவொரு விழாவாக இருந்தாலும் அதற்கு நேரடியாக வருகை தந்தும் ஆதரவை வழங்கியும் பக்கத்துணையாக விளங்கும் நண்பர்களைச் சந்தித்து அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாக இருந்தது.

இங்கே காணப்படும் படத்தில் நிகழ்ச்சித் தொகுப்பாளர் அர்ஜுண். வர்த்தகப் பிரமுகரும் ஏஎம்ஆர் நிறுவனத்தின் அதிபருமான ஏ.எம். ராஜ்கோபால். இவ்வருடத்தின் வர்த்தக வெற்றியாளர் (கியுபெக்) விருது பெற்ற தங்கா இளையதம்பி மற்றும் துர்க்கா பேணிச்சர் நண்பர் ஶ்ரீஸ்கந்தராஜா (ஶ்ரீ) ஆகியோருடன் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் காணப்படுகின்றார்.

**செய்தியும் படமும்: சத்தியன்**



# அவுஸ்திரேலியா மெல்பேர்னில் கர்நாடக இசைக் குறுங்கச்சேரி வியத்தகு பாடல்களால் கானமழை பொழிந்த இளங்கலைஞரம் நிஷித் ராஜன்பாபு



அவுஸ்திரேலியா மெல்பேர்னில் அண்மையில், இனிமையான இசைப்பொழுதொன்றில் இசைப்பிரியர்கள் லயித்திருந்தனர். அவுஸ்திரேலியா விக்டோரியா மெலபர்ன் வர்ஷா இசைக்கல்லூரியின் கர்நாடக இசைக்குறுங்கச்சேரி அண்மையில் மெல்பேர்ன் நகரில் நிகழ்ந்தது.

மெல்பர்ன் வர்ஷா இசைக்கல்லூரியின் மாணவனான நிஷித் ராஜன்பாபுவின் கர்நாடக இசை குறுங்கச்சேரி ஒரு மாலைப்பொழுதை ரம்மியமாக்கி இருந்தது. விக்டோரியா சான்ட்லெர் சமூக நிலைய மணட்பத்தில் இந்த இசைக்குறுங்கச்சேரி இடம்பெற்றது.

தனது நான்காவது வயதில் இருந்து பத்து வருடங்களாக கர்நாடக சங்கீதம் பயின்று வரும் இளம் பாடகர் நிஷித் ராஜன்பாபு பல மேடைகளில் பாடியிருக்கிறார். பல இசைப்போட்டிகளிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் பாடி வெற்றியும் பாராட்டுதல்களையும் வெகுவாகப்பெற்றுள்ளார். இளம் கர்நாடக இசைக்கலைஞன் நிஷித், இலங்கையைச்சேர்ந்த ஆனந்தசிவம் ராஜன்பாபு அலங்ருதா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வராவார்.



நிஷித் ராஜன்பாபு பாடுவதையும் சதீபன் இளங்குமரன் மிருதங்கம் வாசிப்பதையும் நர்த்தனா கனகசபை வயலின் இசைப்பதையும் அனிருத் சிவராமகிருஸ்ணமூர்த்தி கடம் வாசிப்பதையும் ஹரினி சுரேஸ்காந் தம்புரா மீட்டுவதையும் வர்ஷா இசைக்கல்லூரியின் ஆசிரியை துஷாந்தி லக்ஸ்மன் இளம் கர்நாடக, சைப் பாட்டுக்கான விருது வழங்குவதையும் காணலாம்.

செல்வி வரநதி ராமராகவன், நிக்ஷிந்த் ராஜன்பாபு, சற்சனன் வியாசன் ஆகியோர் இணைந்து வரவேற்புரை நிகழ்த்துகின்றனர்.

பிரபல ஊடகவியலாளரும் அறிவிப்பாளருமான சத்தியா நிரஞ்சன் இந்த கர்நாடக இசைக் குறுங்கச்சேரி நிகழ்வை தொகுத்து வழங்கினார்.

இளங்கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக மெல்பர்ன் வர்ஷா இசைக்கல்லூரி அரங்கே கற்றம் என்றில்லாது குறுங்கச்சேரியாக நடத்துவது மிகவும் முன்னோடியான நிகழ்வு. எமது இசைப்பாரம்பரியத்தை அவுஸ்திரேலியா மண்ணில் வர்ஷா இசைக்கல்லூரி வளர்த்து வருகின்றது. நிஷித் என்ற இளம் பாடகன் எதிர்காலத்தில் வெகுவாகப் பிரகாசிப்பாரென்று வாழ்த்துகின்றேன் என்று தொகுப்பாளர் சத்தியா நிரஞ்சன் சுட்டிக்காட்டியுள்ளமை இசை உலகுக்கு சமர்ப்பணம்.

இக்குறுங்கச்சேரியில் நிஷித் வியத்தகுமுறையில் கர்நாடக் சங்கீதத்தை வெளிப்படுத்திப் பார்வையாளர்களை தமது பாடல்களால் பரவசப்படுத்தினார். இளம்பாடகர் நிஷித்தின் பெற்றோர் இலங்கை வடமராட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.







(10 பக்கத் தொடர்ச்சி)

---------------------------------------

## அணையா விளக்கு:

### கட்சி சாராப் போராட்டக் களங்களில் கட்சி சார்ந்தவர்களை அனுமதிக்கக் கூடாதா?

---------------------------------------

அதே சமயம் அக்கால கட்டத்தில் தமிழ் இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சியும் ஆயுதமும் வழங்கியது இந்தியா. ஆனால் அதே இந்தியா இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு பின் மோதலில் ஈடுபடும் ஒரு தரப்பாக மாறியது. எனவே தமிழ் மக்களோடு சம்பந்தப்பட்ட அனேகருடைய கைகளில் ரத்தம் உண்டு. அதன் பின் 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போரில் உலகின் பெரும்பாலான நாடுகள் தமிழ் மக்களுக்கு எதிராக மஹிந்த அரசை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரித்தன.

குறிப்பாக ஐநா தனது கிளிநொச்சி அலுவலகத்தை மூடிவிட்டு வெளியேறியது. சாட்சியமற்ற யுத்தம் என்று எல்லாரும் வாய்கிழிய கத்துகிறார்கள். ஆனால் அவ்வாறு சாட்சிகளை அகற்றியதில், அந்த யுத்த களத்தை சாட்சிகள் இல்லாத களமாக மாற்றியதில் ஐநாவுக்குப் பொறுப்புண்டு. கடந்த வாரம் இலங்கைக்கு வந்த மனித உரிமைகள் ஆணையாளரைச் சந்தித்த மனோகணேசன் இந்த விடயத்தை அவருக்குச் சுட்டிக் காட்டியிருந்தார்.

அன்றைக்கு ஐநா அந்தப் பொறுப்பை ஏற்கவில்லை. ஆனால் இப்பொழுது பொறுப்புக்கூறல் தொடர்பாக ஐநா தீர்மானங்களை நிறைவேற்றி வருகிறது. எனவே இந்தப் பூமியில் எல்லா பேரரசுகளும் ஒரு தொகுதி சிறிய அரசுகளும் தமிழ் மக்களுக்கு எதிராக ஏதோ ஒரு காலகட்டத்தில் செயற்பட்டிருக்கின்றன. எல்லாருடைய கைகளிலும் தமிழ் இரத்தம் உண்டு. ஐநாவின் கைகளிலுந்தான்.

இப்படிப் பார்த்தால் தமிழ் மக்கள் யாரிடம் நீதி கேட்கலாம்? இன அழிப்பின் நேரடிப் பங்காளிகள், மறைமுகப் பங்காளிகள் என்று பார்க்கும் பொழுது தமிழ் மக்கள் யாரிடமும் நீதி கேட்க முடியாது. எனவே இந்த விடயத்தில் தமிழ் மக்கள் மிகத்தெளிவாக இருக்க வேண்டும். உலகில் தூய நீதி கிடையாது. அது நிலைமாறு கால நீதியாக இருந்தாலும் சரி, பரிகார நீதியாக இருந்தாலும் சரி அவை அரசுகளின் நீதிகள்தான். அரசுகள்தான் இந்த உலகத்தில் எது நீதி என்பதை இறுதியிலும் இறுதியாகத் தீர்மானிக்கின்றன. அமுல்படுத்துகின்றன.


எனவே தமிழ் மக்கள் அரசுகளைக் கையாள வேண்டும்.அரசுகளைக் கையாள்வது என்றால் முதலில் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாகப் பலப்படுத்த வேண்டும். அதாவது தமிழ் மக்கள் முதலில் தங்களைத் தாங்களே வலிமையான தேசமாகத் திரட்டிக் கொண்டால்தான், உலகத்தைத் திரட்டிக் கொள்ளலாம். அவ்வாறு நண்பர்களைத் திரட்டிக் கொண்டால்தான் நீதிக்கான போராட்டத்தில் அடுத்த கட்டத்திற்கு முன்னேறலாம்.

எனவே முதலில் தமிழ்மக்கள் தங்களைத் தாங்களே திரட்டிக் கொள்ள வேண்டும். கட்சி சாராப் போராட்டத்தில் “நீ வா; நீ வராதே” என்று நியாயத் தராசை வைத்துக் கொண்டு ஒருவர் மற்றவரை நிறுக்க முற்பட்டால் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாகத் திரட்டி கொள்ள முடியாது.

## கண்ணீர் அஞ்சலி #76

மலர்வு: 07-04-1935

உதிர்வு: 27-05-2025



### திரு. ஜோசப் செல்வரட்ணம் பஸ்தியாம்பிள்ளை

எங்கள் OSTBA உறுப்பினர் #173

May 27, 2025 அன்று இறைவனடி சேர்ந்தார். அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

Ontario Senior Tamils
Benevolent Association
ostba2019@gmail.com ww.ostb5.ca
416-473-6880

# மாந்தை மேற்கில் "புகைத்தல் அற்ற பிரதேசத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற விழிப்புணர்வு நடைபவணி




- எஸ்.ஆர்.லெம்பேட் (24-06-2025)

மன்னார் மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையின் ஏற்பாட்டில் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவணி 24ம் திகதி அன்றையதினம் செவ்வாய்க்கிழமை மாந்தை பொது சுகாதார வைத்திய அதிகாரி ஒஸ்மன் டெனி தலைமையில் மன்/அடம்பன் பாடசாலையில் இருந்து பிரதேச செயலகம் ஊடாக நகர் பகுதி வரை இடம் பெற்றது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் புகைத்தலுக்கு எதிரான மனநிலையை உருவாக்கும் முகமாகவும் அதே நேரம் பாடசாலை சூழலில் புகைத்தல்



உடன் தொடர்பு பட்ட பொருட்களின் விற்பனையை தடை செய்யும் முகமாகவும் குறித்த பேரணி ஒழுங்கு செய்யப்பட்டு இடம் பெற்றது.

"புகைத்தல் அற்ற பிரதேசத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற குறித்த பேரணியில் பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகள் வீதிகளின் இரு புறங்களிலும் காட்சிப் படுத்தப்பட்டதுடன் பொது மக்களுக்கு புகைத்தல் தொடர்பான துண்டு பிரசுரங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

அதே நேரம் அடம்பன் பாடசாலை சூழலில் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் புகைத்தலுடன் தொடர்புடைய எந்தவொரு பொருளையும் விற்பனை செய்வதற்கு எதிரான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த விழிப்புணர்வு நடைபவனியில் மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அதிகாரிகள் ஊழியர்கள், மாந்தை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக ஊழியர்கள், மன். அடம்பன் மகா வித்தியாலய அதிபர் மற்றும் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கனடா — ஸ்காபுறோவில், சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்று நேர்த்தியான போட்டிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பெற்ற இவ்வாண்டின் Miss Tamil Universe- Queens of Angels - 2025 "தேவதைகளின் அரசி"









(முன் பக்கத் தொடர்ச்சி)

எல்லாமாக பதினொரு போட்டியாளர்கள் இறுதிச் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த **Miss Tamil Universe- Queens of Angels - 2025** "தேவதைகளின் அரசி" யை தேர்ந்தெடுக்கும் போட்டியில் போட்டியாளர்களிடம் பல ஆற்றல்கள். எமது மொழி மீதான ஆர்வம் மற்றும் அறிவு அத்துடன் பண்பாடு மற்றும் நுண்கலைகளைப் பற்றி தேடல் உலக விடயங்கள் பற்றிய அறிவுத் தேடல் ஆகியவை தகுதியைத் தீர்மானிக்கும் அளவுகோள்களாகப் பார்க்கப்பட்டு வருகின்றன என்பது கவனிக்கத் தக்கது.

அன்றைய முழு நீள விழாவில் பல விடயங்கள் சேர்க்கப்பெற்று மேலும் சிறப்பைக் கொடுத்தன.

குறிப்பாக **Miss Tamil Universe- Queens of Angels - 2025** "தேவதைகளின் அரசி" தேர்வை ஆரம்பித்து நடத்தி வரும் திருமதி சசிகலா நரேந்திரா அன்றைய தினம் இரண்டு சமூகப் பணிகளுக்கு நிதி அன்பளிப்பு வழங்கியிருந்தார்.


முதலாவது நிதி அன்பளிப்பாக தற்போது திட்டமிடப்பெற்று வரும் கனடாவில் அமையப் போகின்ற "தமிழர் சமூக மையம்" **( Scarborough Tamil Community Centre )** நிதிக்காக திரு நரேந்திரா-திருமதி சசிகலா அவர்களது குடும்பத்தினர் வழங்கிய பத்தாயிரம் கனடிய டாலர்களுக்குரிய மாதிரிக் காசோலை "தமிழர் சமூக மையம்" நிதிக்குழுவின் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்களிடம் ஒப்படைக்கப்பெற்றது

மேலும். இரண்டாவது நிதி அன்பளிப்பாக தற்போது கிழக்கிலங்கையில் கனடா-முன்னாள் இலங்கை வர்த்தகர்கள் சங்கத்தின் சார்பில் மேற்கொள்ளப்பெற்று வரும் வீடற்றவர்களான பத்து வீட்டுத் திட்டத்தில் அடங்கும் ஒரு வீட்டுக்கான செலவுத் தொகையான ஐயாயிரம் கனடிய டாலர்கள் பெறுமதியான மாதிரிக் காசோலை கனடா- முன்னாள் இலங்கை வர்த்தகர்கள் சங்கத்தின் முக்கிய இயக்குனர்களிடம் மேடையில் கையளிக்கப்பெற்றது.





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1153

## ரம்பொட ஆஞ்சநேயசுவாமிகள் ஆலயம், ரம்பொட. மலையகம்

“ வஞ்சனை நீக்கும் அஞ்சனை செல்வன்
கதாயுதனை காற்றின் மைந்தனை இன்சொல்
அதேகொண்டு அவனை அனைத்தும் காக்க
சதா அபிடேகம் சாத்துவர் உவந்து. ”

ஆஞ்சநேய வழிபாட்டிலே வடைமாலை சாத்துவது சிறப்பான அம்சமாகக் கருதப்படுகின்றது. நவக்கிரகங்களிலே ராகு, சனி ஆகியவற்றால் பூவுலகில் வாழும் மாந்தர்களுக்கு ஏதேனும் இடையூறு ஏற்படின், ராகுவுக்குப் பிரியமான உழுந்தும், சனிபகவானுக்குப் பிரியமான எள் எண்ணையால் செய்த வடைமாலையும் ஆஞ்சநேயருக்குச் சாத்தி வழிபட்டால், சனி, ராகு ஆகியவற்றின் இடையூறிலிருந்து மனிதர்கள் விடுபடுவர். இதற்காகவே ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்தப்படுகின்றது. இவ்வாறே துளசி மாலையும், வெற்றிலை மாலையும் அறுகம்புல்மாலையும் ஆஞ்சநேயருக்கு மிகவும் பிடித்தவையாகும். எல்லா நாளும் ஆஞ்சநேயருக்குச் சிறந்த நாளாகக் கருதப்பட்டபோதிலும், வேதாசிரியர்களின் கூற்றுப்படி, புதன், வியாழன், சனி ஆகிய நாட்கள், வழிபடுவதற்குச் சிறந்த நாட்களெனக் கூறிப்பட்டுள்ளது.

மார்கழிமாதம் மூலநட்சத்திரத்துடன் கூடிய அமாவாசை நாள், ஆஞ்சநேயர் திருஅவதாரம் செய்த நாளாகும். அன்று ஆஞ்சநேயருக்கு அலங்காரம் செய்து தீப, தூபம் காட்டி வணஙகுவது சிறப்பாகும். சித்திரை மாதம், ஸ்ரீ ராமநவமியிலும், மாதந்தோறும் கேட்டை நட்சத்திரத்திலும் வழிபடுவது, மிகுந்த பலனைக் கொடுக்கும். திருப்பதியிலே ஸ்ரீ வெங்கடாசலபதிக்கு சுப்ரபாதம் பாடப்படும். இவ்வாறே ஆஞ்சநேயரை வாழ்த்தியும் சில ஆலயங்களிலே சுப்ரபாதம் பாடப்படும்.

ஆஞ்சநேய சுவாமிகள் பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டவர். இராமதூதுவனாக அறியப்பட்ட ஆஞ்சநேயர், இராமச்சந்திரமூர்த்தியின் பரமபக்தராக இருக்கும்போதே, பரமஞானியாகவும் விளங்கியுள்ளார். ஒன்பது வியாகரணமும் தெரிந்த “நவ வ்யாகரண வேத்தா” என்று, ராமரே ஆஞ்சநேயரைப் புகழும் அளவிற்குப் பெரும் கல்விமானாக விளங்கியுள்ளார். ஆனாலும் புத்திப் பிரகாசம், சக்திப் பிரவாகம் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு, பக்தியிலேயே பரமானந்தம் அனுபவிப்பவராக ஆஞ்சநேய சுவாமிகள் காணப்படுகின்றார். ஞானத்திலே உச்சநிலை, பலத்திலே உச்சநிலை, பக்தியிலே உச்சநிலை, வீரத்திலே உச்சநிலை, கீர்த்தியிலே உச்சநிலை, சேவையிலே உச்சநிலை, வினயத்திலே உச்சநிலை என அனைத்தும் நிறைந்திருக்கின்ற ஸ்வரூபமாக, ஆஞ்சநேயசுவாமிகள் விளங்குகின்றார். இவை யாவற்றிற்கும் மேலாக, இவருடைய பிரமச்சரியம் போற்றத்தக்கது. இராமபிரானுக்குச் சேவை செய்வதைத்தவிர வேறெதையும் கருத்திற்கொள்ளாத பக்திமானாக, ஆஞ்சநேயசுவாமிகள் போற்றப்படுகின்றார்.

இராமநாமம் எங்கே ஒலித்தாலும், ரகுநாதகீர்த்தனம் எங்கே நடந்தாலும், அங்கெல்லாம் மற்றவர் கண்ணுக்குத் தெரியாமல் ஆஞ்சநேயசுவாமிகள் ஆனந்தக்கண்ணீர் பொழிந்தவாறு கேட்டுக்கொண்டிருப்பார். ஸ்ரீ இராமபிரான், சீதாப்பிராட்டி ஆகியோரின் முழு அன்பிற்கும் பாத்திரமான இவரை, ஈழத்திலே அனுமார் என்று அன்போடு அழைத்து வழிபடுகின்றார்கள். ஆஞ்சநேயசுவாமிகளிடம் காணப்பட்ட பண்பாடுகள் காரணமாக, அவரை மகான்கள் பலரும் பூசித்துள்ளனர். மலையகத்தில் எழுந்தருளியுள்ள ரம்பொட அஞ்சநேயர் ஆலயத்தின் மூலமூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ ராமபிரான், சீதாபிராட்டி ஆகியோரின் முழு அன்புக்கும் பாத்திரமானவர், அனுமான் என்றழைக்கப்படும் பெருமை பெற்றவர். ஸ்ரீ ஆஞ்சநேயர் என்றும் பிரமச்சாரி. தமிழ்நாட்டில் இவரை அனுமார் என்றும், கர்நாடகத்தில் அனுமந்தையா என்றும், கேரளாவில் ஆஞ்சநேயர் சுவாமி என்றும், மராட்டியத்தில் மாருதி என்றும், வடமாநிலங்களில் மகாவீர் என்றும் அழைத்துப் பக்தியுடன் பூசை செய்து வருகின்றார்கள். ஸ்ரீ ராகவேந்திர சுவாமியும் பஞ்சமுகி குகையில் அமர்ந்து, ஆஞ்சநேயர் வழிபாடு நடத்தினார்.

மகாபாரத யுத்தத்தின்போது அர்ச்சுனனை ஆயதபாணியாக உட்கார வைத்து, பரந்தாமன் ஓட்டிய ரதத்தில், வீர அனுமான் கொடிதான் பறந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அர்ச்சுனனின் தேர்க்கொடியில் இருந்துகொண்டு கீதோபதேசத்தை நேரில் கேட்டவர் ஸ்ரீ ஆஞ்சநேயர். இராமநாமம் கேட்கும் இடங்களில் ஆனந்தம் நிரம்பிய கண்களுடன், கூப்பிய கரங்களுடன் அரூபியாக அருகில் நின்று செவி மடுக்கின்றார், அருள் தரும் ஸ்ரீ ஆஞ்சநேயர் என, புராணங்களிலே கூறப்பட்டுள்ளது. ஞானத்தில், பலத்தில், பக்தியில், வீரத்தில், கீர்த்தியில், சேவையில், வினயத்தில், உச்சநிலை கொண்டவராக, இவையெல்லாம் சேர்ந்திருக்கின்ற ஸ்வரூபம் ஒன்று உண்டென்றால் அது ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமியையே குறிக்கும்.

இவ்வாறான பெருமை பல கொண்ட ஆஞ்சநேய சுவாமிகளுக்கு, மலையகத்திலும் கோவில்கட்டிச் சிறப்புச் செய்திருக்கின்றார்கள். ஈழத்தின் மத்தியிலுள்ள மலையகப் பிரதேசத்தில் நுவரெலியா, இயற்கை அழகு கொஞ்சும் அற்புதமான பூமியாக விளங்குகின்றது. நுவரெலியாவின் நகரஎல்லையிலே சீதாஎலிய என்ற இடம் காணப்படுகின்றது. இராவணன் சீதையைக் கவாந்துசென்று இலங்கையிலுள்ள அசோகவனத்திலே சிறைவைத்தான் என இராமாயணத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. சீதஎலிய என்ற இடத்திலேதான் அசோகவனம் காணப்படுகின்றது.

வளரும்...

NISSAN | VILLAGE NISSAN

தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு
சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION

25 SENTRA
S CVT ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION

25 KICKS PLAY
S ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION

25 ROGUE
S AWD
0.99% | 30 MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash


Sajanthan Vijayakumar
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com



# இவ்வார ராசிபலன்

**04-07-2025 வெள்ளி தொடக்கம் 10-07-2025 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மேஷம்:** உயரங்களை சந்திக்கும் வாரம். குதூகலம் தாண்டவமாடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்கள செய்தி வரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். திறமைகள் வெளிப்படும். செல்வாக்கு மேம்படம். காதலர்கள் தம்பதியாவார்கள். சுபச்செலவு அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. வீண் சஞ்சலங்கள் விலகும். வேண்டாத கவலைகள் விலகும். முயற்சிகள் பலன் கொடுக்கும். நினைத்த விஷயம் நிறைவேறும். கடன் பாக்கிகள் வசூலாகும். திருமண தீபம் சுடர்விடும். பொருளாதாரம் மேம்படும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். எதிலும் வெற்றி கிட்டும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வேண்டாத நபர்களின் பேச்சை குறைக்கவும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடி பொருட்கள் சேதமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கௌரவத்தில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிட்டும். விவசாயிகள் பயன்பெறுவார்கள். வீண் செலவுகளை தவிர்ப்பது நல்லது. எதிரிகளால் ஏற்றம் உண்டு. உத்தியோக உயர்வு கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வேலவப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,H




**ரிஷபம்:** கட்டுமானப் பணியில் கௌரவம் உயரும் வாரம். ஆசைகள் நிறைவேறும். காரிய தாமதம் ஏற்படும். இடமாற்றம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். தொழில் வளம் கூடும். சொத்துக்கள் சேரும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உடல்நலம் சீராகும். விரோதங்கள் விலகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் பெரிய பலனை அடைவீர். உலோகத்தொழில் உயர்வு தரும். உறவினர் வருகையால் பலன் உண்டு. கல்விச்செலவு உண்டு. நண்பர்கள் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். பொருளாதாரம் முன்னேற்றம் மேம்படும். பாராட்டுக்கள் குவியும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். திடீர் மாற்றம் ஏற்படும். உடல் சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். முகப்பொலிவு கூடும். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவார்கள். சமூக சேவை செய்ய முன் வருவார்கள். மருத்துவத்துறையில் ஆர்வம் கொள்வீர்கள். காதலில் புத்துணர்வு இருக்கும். வியாபாரம் வளர்ச்சி தரும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கடன் சுமை தீரும். வாய்ச்சொல் பலன் தரும். வருமானத் தடை உண்டு. வாகனச் செலவு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 3,5,9,7
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,B




**மிதுனம்:** தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் வாரம். அலுவலகங்களில் பாராட்டுக்கள் குவியும். பயணத்தால் நல்ல பயன் கிடைக்கும். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பழிச்சொல்லில் இருந்து விடுபடுவீர்கள். பாக்கிகள் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். பழையக்கடன் வசூலாகும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். புதிய பொருள் சேரும். பூமியால் லாபம் அடைவீர்கள். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். சட்டம் சாதகமாகும். திட்டங்கள் நிறைவேறும். வெற்றி சீக்கிரம் கிட்டும். பயணத்தினால் அனுகூலம் உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அமையும். ஆண்களின் ஆதிக்கம் உயரும். தடைகள் விலகும். வேலைப்பளு கூடும். அரசியல் லாபம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பல்வலி வந்து நீங்கும். எதிர்பார்ப்புகள் உருவாகும். நண்பர்களை சந்திப்பீர்கள். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். தனலாபம் பெருகும். இடமாற்றம் ஏற்படும். பயணம் தடைப்படும். தாய்வழி உறவு நன்மை தரும். குடும்ப தேவை அதிகரிக்கும். பிள்ளைகளால் மேன்மை உண்டு. மதிநுட்பம் தேவை. ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலம் கூடும். மற்றவர்களால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாகும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி தரும். வெளியூர் பயணம் செல்வீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 2,1,4,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,E




**கடகம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும் வாரம். காரியம் வெற்றி தரும். அலைபேசித் தகவல் ஆனந்தம் தரும். உடல்நலனில் அக்கறை தேவை. வெகுமதிகள் உண்டு. வெளிநாட்டுப் பயணம் உண்டு. கனவு பலிதமுண்டு. குடும்பத்தில் அன்யோன்யம் கூடும். கலைத்தொழிலில் ஆர்வம் கூடும். விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. ஆபரணச் சேர்க்கையுண்டு. கவனமுடன் செயல்பட வேண்டும். பொறாமைகள் அகலும். விட்டுக்கொடுத்து செல்ல வேண்டும். அமைதியாக செயல்பட வேண்டும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். பொன்னான தருணம். புதிய வாகனம் வாங்குவீர்கள். புது மனை புகுப்பிப்பீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். குடும்ப மனநிறைவு தரும். புதிய நண்பர்களை தவிர்க்கவும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நல்லோர் நட்பு கிட்டும். குடும்ப கௌரவம் உயரும். திருமண தடைகள் விலகும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பங்குச் சந்தை மாற்றம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். உடல் ஆரோக்கியம் குறையும். பணவிரயம் ஏற்படும். உறவினரால் செலவு உண்டு. கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். மன வேதனை குறையும். எதிர்மறையான எண்ணங்கள் விலகும். வசதிகள் பெருகும். பொருளாதார உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 7,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Y




**சிம்மம்:** நல்ல வாய்ப்புக்கள் வரும் வாரம். கடன் பிரச்சனை உருவாகும். கால்நடைகளால் பலன் உண்டு. கலைத்தொழிலில் ஆர்வமுடன் செயல்படுவீர்கள். செயல்திறன் வெளிப்படும். நிர்வாகத் திறன் கூடும். உத்தியோக முன்னேற்றம் ஏற்படும். மங்களச் செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். வருமானம் உயரும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். உறவினர்களின் வருகையால் செலவுகள் அதிகரிக்கும். கடன் குறையும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். பெண்களுக்கு யோகமான காலம். செயல்களில் கவனம் தேவை. அலைச்சலால் அசதி ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். வேலை திறன் அதிகரிக்கும். சுபக்காரியச் செய்தி வரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன் பிறந்தோரால் உதவி கிடைக்கும். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். உள்ளம் பூரிப்படையும். மனம் மகிழும் நாளாக அமையும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் தேடி வரும். தொலைபேசித் தகவல் நல்ல செய்தி தரும். செல்வாக்கு சேரும். வருமானம் உயரும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். விபரீத எண்ணம் விலகும். சேய் நலம் கூடும். நோய் நொடிகள் அகலும். சேமிப்பு உயரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,1,9
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,J




**கன்னி:** உடல் உபாதை விலகும் வாரம். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச்செலவு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் வியாபாரம் லாபம் தரும். வழக்குகள் வெற்றி தரும். வீண் வம்பு விலகும். மருத்துவச் செலவு ஏற்படும். பிள்ளைகளால் பெருமை உண்டு. விருந்தினர் வருகை உண்டு. வியாபாரத்தில் நன்மை உண்டு. சாதனைகள் நிகழ்த்தும் நாளாக அமையும். சொத்துப் பிரச்சனைகள் தீரும். அரசு வழியில் ஆதாயம் தரும். கடன்சுமை தீரும். நன்மைகள் பெருகும். கூட்டுத்தொழில் லாபம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. கனவுத்தொல்லை உண்டு. ஏற்றுமதி தொழிலில் முன்னேற்றம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. தன வரவில் தாமதம் உண்டு. குடும்பத்தில் சஞ்சலம் உண்டு. மேலதிகாரியின் ஆதரவு உண்டு. கல்வியில் ஏற்றம் உண்டு. கவலைகள் குறையும். உடல்நலத்தில் அக்கறை தேவை. பெரியோர்கள் ஆசி கிடைக்கும். வீண் பேச்சை தவிர்க்கவும். தனம் சேரும் காலம். கடன் பிரச்சனை தீரும். வியாபார வாய்ப்பு உண்டு. புத்திரர் வழியில் தொல்லை உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வீண் வம்பு ஓடி மறையும். வாழ்க்கை வசதி பெருகும். வேலை பளு அதிகரிக்கும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கோதுமை தானம் குல விருத்தியை சேர்க்கும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 7,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,L




**துலாம்:** உள்ளத்தில் கவலைகள் விலகும் வாரம். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். நல்வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். வில்லங்கம் விலகும். போட்டிகள் மறையும். தொல்லைகள் அகலும். இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. விவசாய விளைச்சல் மூலம் நற்பலன் உண்டாகும். புதிய சிந்தனை உருவாகும். போட்டி பொறாமைகள் மறையும். பூமியால் லாபம் உண்டாகும். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. உடல்நலம் சீராகும். இனிய தகவல் வந்து சேரும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். பொருள் நஷ்டம் ஏற்படும். வேலைப்பளு கூடும். நிதானம் தேவை. அரசியல் ஆதாயம் உண்டு. குடும்ப சச்சரவு ஏற்படும். சங்கடம் அதிகமாகும். வருமான வரி தொல்லை ஏற்படும். விரோதம் விலகும். படிப்பில் ஆர்வம் கூடும். சந்தோஷமான நாளாக அமையும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. உடல் நலம் சீராகும். புஷ்ப வழிபாடு புண்ணியம் சேர்க்கும். வசந்தம் தேடி வரும். நற்பலன்கள் கிடைக்கும். குதூகலம் அதிகரிக்கும். ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. நிம்மதியான குடும்ப வாழ்க்கை அமையும். இனிதான காரியம் நடைபெறும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். கணவன், மனைவி உறவு மேம்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: எமதர்ம ராஜா, அதிர்ஷ்ட எண்: 4,2,3,5
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P





**விருச்சிகம்:** வெற்றி கிட்டும் வாரம். நற்செய்தி நாடி வரும். தொழில் வாய்ப்பு கூடி வரும். தடைகள் விலகும். தேவைகள் பூர்த்தியாகும். விருப்பங்கள் நிறைவேறும். வீண் செலவுகள் அதிகமாகும். புதிய பொறுப்பு வரும். அரசியலில் ஆதாயம் உண்டு. திறமைகள் அதிகமாகும். பயணம் லாபம் தரும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. கலையில் ஆர்வம் பெருகும். நண்பர்களை சந்திப்பீர்கள். தாயின் நலனில் அக்கறை தேவை. பிரச்சனைகள் விடுபடும். புதிய முயற்சி பலன் தரும். நினைத்த காரியம் நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து உயரும். இனிய எண்ணம் உதயமாகும். அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத்தன்மை கூடும். பொன், பொருள் சேரும். மாலைநேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். நினைத்ததை சாதிக்கும் காலம். உற்சாகம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. திடீர் செலவு ஏற்படும். மங்களச்செய்தியால் மனம் மகிழும். பிள்ளைகளால் பெருமை சேரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆலோசனை பூர்த்தியாகும். அணிகலன் ஆர்வம் கூடும். பங்குச்சந்தையில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,4,5,6
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K

(தொடர்ச்சி 26 பக்கம்)

# அமெரிக்கா ஈரானின் அணு தளங்களை குண்டுவீசி தாக்கியது: போர்டோ, நட்டாஞ்சு, எஸ்பஹான் மீதான தாக்குதல்களின் ஆழமான பகுப்பாய்வு




## என்ன நடந்தது?

ஜூன் 21 (அமெரிக்க நேரம்), ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அமெரிக்க இராணுவ படைகள் ஈரானின் முக்கியமான மூன்று அணுவாயுதத் தளங்களான போர்டோ (Fordow), நட்டாஞ்சு (Natanz) மற்றும் எஸ்பஹான் (Esfahan) ஆகியவற்றை ஒருங்கிணைந்த தாக்குதல்களுக்கு உட்படுத்தியதை உறுதிப்படுத்தினர். அமெரிக்கா B-2 ஸ்பிரிட் ஸ்டெல்த் குண்டுவீச்சு விமானங்களை பயன்படுத்தி பூமிக்கடியில் அமைந்துள்ள ஃபோர்டோ யுரேனியம் செறிவூட்டல் தளத்தைத் தாக்கியது. இதில் 5-6 GBU-57 "பங்கர் - பஸ்டர்" குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாகவும், இவை அமெரிக்காவின் அணு - அல்லாத ஆயுதங்களில் மிகவும் சக்திவாய்ந்தவை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதே நேரத்தில், டோமாகாக் க்ரூஸ் ஏவுகணைகள் நதான்ஸ் மற்றும் எஸ்ஃபகான் தளங்களைத் தாக்கின.

இந்த தாக்குதல்கள் ஒரு வரலாற்று மாற்றத்தைக் குறிக்கின்றன: 1979 ஈரான் புரட்சிக்குப் பிறகு முதல் முறையாக அமெரிக்கா நேரடியாக ஈரானுக்குள் இலக்குகளைத் தாக்கியுள்ளது. ஜனாதிபதி டிரம்ப் இந்த செயல்பாட்டை ஒரு "அற்புதமான இராணுவ வெற்றி" என்று குறிப்பிட்டு, ஃபோர்டோ "முற்றிலுமாக அழிக்கப்பட்டது" என்று அறிவித்தார். அமெரிக்க பாதுகாப்பு ஆதாரங்களின்படி, ஈரானின் விமானத் தற்காப்பு அமைப்புகள் பயனற்றவையாக இருந்தன அல்லது மின்னணு போர் மூலம் நடுநிலையாக்கப்பட்டன.

## ஈரானின் உடனடி பதில்

பதிலடியாக, ஈரான் 30 ஏவுகணைகளை இஸ்ரேலை நோக்கி ஏவி தாக்கியது, இது மேல் கலிலீயில் இருந்து அஷ்டோட் வரை பரவலான எச்சரிக்கைகள் மற்றும் சைரன்களைத் தூண்டியது. தெல் அவீவ், ஹைபா மற்றும் நெதன்யா பகுதிகளுக்கு அருகே ஏவுகணைகள் தாக்கியதாகவும், வட மற்றும் மத்திய இஸ்ரேலில் வெடிப்புகள் மற்றும் ஏவுகணை தடுப்பு நிகழ்வுகள் பலருக்கு காயங்கள் மற்றும் சொத்து சேதத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் செயல்களை "திறந்த போர் செயல்" என்று கண்டித்து, பதிலடி "எல்லைகளைத் தாண்டிச் செல்லும்" என்றும் எச்சரித்தது.

லெபனானின் ஹெஸ்பொல்லா, யேமனின் ஹூதிகள் (Houthis) உள்ளிட்ட ஈரானின் ப்ராக்ஸி படைகளும் மோதலில் ஈடுபடுவதற்கான சைகளைக் கொடுத்துள்ளன, இது ஒரு பரந்த பிராந்தியப் போரின் ஆபத்தை அதிகரிக்கிறது.

## மோதல் அதிகரிக்கும் ஆபத்து

இந்த சம்பவம் மத்திய கிழக்கில் ஒரு பரந்த போரின் ஆபத்தை கூர்மையாக அதிகரித்துள்ளது. இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இரண்டும் இப்போது ஈரானுடன் நேரடியான இராணுவ மோதலில் ஈடுபட்டுள்ளன, இது ஈரான் ஆதரவு தீவிரவாதக் குழுக்களை (ஈராக், சிரியா, லெபனான், யேமன்) ஈர்க்கக்கூடும். சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAE) போன்ற வளைகுடா நாடுகள் இராணுவ எச்சரிக்கை நிலையில் உள்ளன. ஐக்கிய நாடுகளின் செயலாளர் அந்தோனியோ குட்டரஸ் கடும் கவலை தெரிவித்து, முழு அளவிலான போரைத் தவிர்க்க அனைத்து தரப்பினரும் சமாதானம் காக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கத்தார் முதல் பஹ்ரைன் வரையிலான அமெரிக்க படைகள் தங்கள் பாதுகாப்பை வலுப்படுத்துகின்றன, அதே நேரத்தில் ஈரான் இஸ்லாமிய புரட்சி காவல் படை (IRGC) அலகுகளை பாரசீக வளைகுடாவை நோக்கி நகர்த்தத் தொடங்கியுள்ளது. பன்னாட்டு எண்ணெய் விலைகள் திடீரென உயர்ந்தன, மேலும் பிராந்தியத்தில் சில விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டன.

## அரசியல் மற்றும் உள்நாட்டு தாக்கங்கள்

ஜனாதிபதி டிரம்ப், இந்த தாக்குதல்கள் "ஈரான் அணு ஆயுதங்களைப் பெறுவதைத் தடுக்க" மற்றும் "இஸ்ரேலின் இறைமையைப் பாதுகாக்க" தேவையானவை என்று கூறினார். இந்த நடவடிக்கை, டிரம்பின் முன்னைய "குறுக்கிடா கொள்கை" (non-interventionist) பேச்சுக்கு முரணான ஒரு திடீர் மாற்றத்தைக் காட்டுகிறது, மேலும் இது 2024 தேர்தல் உத்தியாக வலிமையை வெளிப்படுத்தும் ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது. அமெரிக்காவின் ட்ரம்ப் ஆதரவு ரிபப்ளிக்கன் வல்லூறுகள் இந்த செயல்பாட்டைப் பாராட்டினர், ஆனால் டெமாகிரட்கள் மற்றும் சில மிதவாத ரிபப்ளிக்கன்கள் காங்கிரஸ் கலந்தாலோசிக்கப்படாமல் இந்த நடவடிக்கை ஒரு தலைப்பக்கமான மற்றும் அரசியலமைப்புக்கு முரணானவை என்று விமர்சித்தனர்.

இதற்கிடையில், இஸ்ரேலின் போர்க்கால அமைச்சரவை அமெரிக்காவின் ஈடுபாட்டையும் தமக்காக ஆதரவு வழங்கலையும் வரவேற்றது. பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இந்த தாக்குதல்களை "வரலாற்று காணாத கூட்டணி செயல்" என்று அழைத்து, இஸ்ரேலுடன் "தோளோடு தோள் நின்ற" அமெரிக்க நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்தார்.

## அடுத்து கவனிக்க வேண்டியவை

### அடுத்த சில நாட்களில் கவனிக்க வேண்டிய பல முக்கியமான நிகழ்வுகள் உள்ளன:

- ஈரானின் அடுத்த நடவடிக்கை - ஒரு பெரிய எதிர்த்தாக்குதலைத் தொடங்குமா அல்லது ஹெஸ்பொல்லா, ஹூதிகள் (Houthis) அல்லது ஈராக்கில் உள்ள ஷியா போராளிகள் மூலம் ப்ராக்ஸி போரைத் தேர்ந்தெடுக்குமா? ஒரு பெரிய ஈரானிய பதிலடி போரை விரிவுபடுத்தலாம் மற்றும் வளைகுடா நாடுகள், பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க தளங்கள் அல்லது ரஷ்யா மற்றும் சீனா போன்ற உலகளாவிய நாடுகளை ஈர்க்கலாம்.

- அமெரிக்க காங்கிரஸின் எதிர்வினை - ஜனாதிபதி டிரம்பின் ஒரு தலைப்பக்கமான இராணுவ நடவடிக்கைக்கு காங்கிரஸ் கடுமையாக எதிர்வினை தெரிவிக்கும். சில சட்டமன்ற உறுப்பினர்கள் "போர் அதிகார தீர்மானத்தை" (War Powers Resolution) பயன்படுத்தி, இந்த தாக்குதல்களின் சட்டபூர்வத்தன்மையை சவாலாக எழுப்பலாம்.

- உலகளாவிய இராஜதந்திர எதிர்வினைகள் - ஐரோப்பிய யூனியன், சீனா மற்றும் ரஷ்யாவின் எதிர்வினைகள் பன்னாட்டு ஒருமித்த கருத்தை உருவாக்குவதில் முக்கியமானதாக இருக்கும்.

- ஈரானின் அணு திட்டம் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தால், ஈரான் அணு பரவல் ஒப்பந்தத்தை (NPT) விட்டு வெளியேறலாம் அல்லது மற்ற இடங்களில் ரகசிய செறிவூட்டல் செயல்பாடுகளை துரிதப்படுத்தலாம். இது உலக பாதுகாப்பை கடுமையாக பாதிக்கும்.

முழு பிராந்தியமும் ஒரு உறுதியற்ற நிலையில் உள்ளது - ஒரு தவறான நடவடிக்கை முழு அளவிலான போரைத் தூண்டக்கூடும்.

## பரந்த தாக்கங்கள்

அமெரிக்காவின் ஈரான் அணு தளங்களின் மீதான குண்டுத் தாக்குதல் ஒரு வரலாற்று நிகழ்வாகும். இது நான்கு தசாப்தங்களுக்கும் மேலான கட்டுப்பாட்டை உடைத்தது மட்டுமல்லாமல், இறைமை, உலகளாவிய விதிமுறைகள் மற்றும் உத்தர நிலைத்தன்மை பற்றிய கேள்விகளையும் எழுப்புகிறது. ஈரானின் அணு திட்டம், ஏற்கனவே சர்ச்சைக்குரியது, இப்போது இராணுவ ரீதியாக இலக்காகிவிட்டது. இது துருக்கி அல்லது சவுதி அரேபியா போன்ற பிற பிராந்திய சக்திகள் அணு தடுப்பு (deterrence) எதிர்காலத்தை எவ்வாறு கருதுகின்றன என்பதில் நீடித்த விளைவுகளை ஏற்படுத்தும்.

இது ஒரு முன்னுதாரணத்தையும் அமைக்கிறது: அணு அச்சுறுத்தல்களுக்கு இராணுவ முன்னெச்சரிக்கை இப்போது சாத்தியமான ஒன்றாக உள்ளது. இது அணு ஆற்றல் முகமை (IAEA) போன்ற இராஜதந்திர வழிமுறைகளை பலவீனப்படுத்துகிறது, இது சமீபத்தில் வரை ஈரானின் திட்டத்தை கண்காணித்து வந்தது.

## இறுதிச் சிந்தனைகள்

இது ஒரு தனிமைப்படுத்தப்பட்ட தாக்குதல் அல்ல - இது மத்திய கிழக்கில் ஒரு புதிய ஜியோபாலிட்டிகல் கட்டத்தின் ஆரம்பம். அமெரிக்கா இஸ்ரேலின் ஈரான் மோதலில் முறையாக நுழைந்துவிட்டது, இதன் மூலம் பல ஆண்டுகளாக பிராந்தியத்தை உறுதியற்றதாக மாற்றக்கூடிய பதட்டங்களை அதிகரித்துள்ளது. அடுத்து என்ன நிகழ்கிறது என்பது ஈரானின் கட்டுப்பாட்டுத் திறன், அமெரிக்க அரசியல் பதில் மற்றும் ஐரோப்பா, ஐ.நா. அல்லது பின்தங்கிய பேச்சுவார்த்தைகள் மூலம் இராஜதந்திர வழிகள் மீண்டும் தொடங்கப்படுமா என்பதைப் பொறுத்தது.

உலகம் இப்போது குண்டுகளை மட்டுமல்ல - ஆளுமை அல்லது பொறுப்பின்மையையும் கவனித்துக்கொண்டிருக்கிறது. அடுத்த 72 மணி நேரத்தில் எடுக்கப்படும் முடிவுகள், உலக பாதுகாப்பின் அடுத்த தசாப்தத்தை வரையறுக்கக்கூடும்.

**- ஈழத்து நிலவன் - 22-06-2025**



# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)

**தனுசு:** மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும் வாரம். தன்னம்பிக்கை கூடும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். குடும்ப கௌரவம் உயரும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். தோஷங்கள் ஒதுங்கும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். பொது வாழ்வில் புகழ் கூடும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் உண்டு. பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். தெம்பும், தைரியமும் கூடும். மங்கையருக்கு திருமண பாக்கியம் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்ட காலம் மறையும். ஜீவராசிகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். மன அமைதி சீர் குலையும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பொறாமைகள் விலகும். சிறப்புக்கள் சேரும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X

**மகரம்:** கர்ஜனையோடு வலம் வரும் வாரம். உற்சாகம் அலைமோதும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். காரியத்தடை ஏற்படும். புதிய எண்ணங்கள் உருவாகும். மனநிறைவு உண்டாகும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். வெற்றியை எட்டும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும் முடிவுகளில் தெளிவு இருக்கும். செயலில் துணிவு கூடும். உடல்நிலையில் அக்கறை தேவை. ஆதாயம் பெருகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பலன் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். கடன் சுமை குறையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Q

**கும்பம்:** கௌரவம் அதிகரிகும் வாரம். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். காதலர்கள் தம்பதியாவார்கள். விபரீத போக்கு மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பேச்சில் கம்பீரம் இருக்கும். பூர்வீக சொத்து கிடைக்கும். சுபச்செய்திகள் வீடு தேடி வரும். திருமணப் பேச்சு நல்ல தகவல் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் மேன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். பயணம் அனுகூலம் தரும். சாதனைகள் படைக்கும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். நட்பு வட்டம் விரிவடையும். ஆடை, ஆபரணம் சேரும். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சிகள் பலன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,D

**மீனம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய வாரம். செயல் திறமை வெளிபடும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புகள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். புத்தி சாதுர்யம் கூடும். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து உண்டு. மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. மங்களச் செய்தி வரும். வெற்றிகள் குவியும். வீண் செலவுகளை தவிர்க்கவும். ஆன்மீகத்தில் ஆர்வம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். அலைச்சல் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். மாணவர்களுக்கு கவனம் தேவை. காதலர்கள் தம்பதியாவார்கள். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் வரும். செல்வாக்கு மேம்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A




# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND
INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank, TD Canada Trust, National Bank, RFA, First National Financial LP, Manulife, Desjardins, MCAP, Home Trust, Equitable Bank, radius financial, RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்... 26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

தமிழ் நிர்வாகத்தில் இயங்கும் நிறுவனம்
RIDE-U
• Airport
• Niagara Falls
• Ottawa
• Montreal
• Quebec City
• USA
rideu2025@gmail.com
(416)789-6556
BOOK NOW

உதயம் 1526 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 4, 2025

# கனடாவின் ஒன்றாரியோவில் உள்ள கோண்வோல் சிவன் ஆலயத்தில் கனடா தினத்தன்று நடைபெற்ற "இலட்ச்சார்ச்சனை ஆவர்த்தி" அபிசேகங்கள்



ரொறன்ரொ மற்றும் மொன்றியால் மாநகரங்களில் உள்ள சிவாச்சாரியப் பெருமக்கள் பத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டு நடத்திய "இலட்ச்சார்ச்சனை ஆவர்த்தி" அபிசேகங்கள் கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள கோண்வோல் சிவன் ஆலயத்தில் கனடா தினமன்று நடைபெற்றன. ஏராளமான அடியவர்கள் கலந்து சிறப்பித்த இந்த விசேட அபிசேகங்களில் பல பக்தர்கள் கலந்து கொண்டு பெருமானின் அருள் பெற்றனர்.

அன்றைய தினம் ஆலயத்தின் அறங்காவல் சபைத் தலைவர் சிவரூபன் அவர்கள் உட்பட அங்கத்தவர்கள் மற்றும் தொண்டர்கள் என பலரும் மிகுந்த பக்தியோடு அனைத்து பூசை மற்றும் அபிசேகங்களில் பங்கெடுத்தனர்.

(தொடர்ச்சி 20ம் பக்கம்)

# தனது பிறந்த நாள் மேடையில் இரண்டு சமூகப் பணிகளுக்கு குடும்பம் சார்ந்த நிதி அன்பளிப்புக்களை வழங்கிய கனடா வர்த்தகர் கிருஸ்ணகோபால் செல்லத்துரை

கனடாவில் தனது முன்னேற்றமான வர்த்தகச் செயற்பாடுகள் மற்றும் சமூகப் பணிகள் ஆகியவற்றின் மூலம் நன்கு அறியப்பெற்றவராக விளங்கும் நண்பர் கிருஸ்ணகோபால் செல்லத்துரை அவர்களின் 65வது பிறந்தநாள் விழா அவரது குடும்பத்தினர் சார்பில் சிறப்பான ஏற்பாடுகளோடு ஸ்காபுறோ நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று 29ம் திகதி கொண்டாடப்பெற்றது.

அன்றைய தினம் அங்கு கலந்து கொண்ட அனைவராலும் பாராட்டப்பெற்ற அம்சங்களின் முக்கியமான இரண்டு நிதி அன்பளிப்புக்கள் இன்றும் பேசப்பெற்று வருகின்றன.

(தொடர்ச்சி 20ம் பக்கம்)




# முகம் தெரியாத "நெருப்பு மனிதர்கள்" தான் கரும்புலிகள்



"கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்பு கவசங்கள்.எமது போராட்ட பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனோபலத்தால் உடைத்தெறியும் நெருப்புமனிதர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள். ஒரு கரும்புலிவீரன் தன்னைவிட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக் கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான்""-- கே.பாலா

கரும்புலிகளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 5ஆம் திகதி கடைப்பிடிக்கப்படும் நினைவு நாளே கரும்புலிகள் நாள். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி கரும்புலி கப்டன் மில்லரின் வடமராட்சி நெல்லியடி இராணுவ முகாம் மீதான தாக்குதலுடன் கரும்புலிகள் சகாப்தம் தொடங்கியதையிட்டே தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் 05.07.1993 அன்று ஜூலை 5ஆம் திகதி கரும்புலிகள் நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது. (தொடர்ச்சி 16ம் பக்கம்)

# மொன்றியால் வாழ் சில "கனடா உதயன்" நண்பர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் நடைபெற்ற சிறு சந்திப்பு



கடந்த செவ்வாய்க்கிழமையன்று 1ம் திகதி கனடிய தேசத்தின் பிறந்த நாளாக இருந்தாலும் கனடா வாழ் தமிழ்" மக்களின் இரண்டாவது தளமாகத் திகழும் மொன்றியால் நகருக்கு நண்பர் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களுடன் பயணித்திருந்தோம்.

கனடா உதயன் நிறுவனம் ரொறன்ரோவில் நடத்தும் எந்தவொரு விழாவாக இருந்தாலும் அதற்கு நேரடியாக வருகை தந்தும் ஆதரவை வழங்கியும் பக்கத்துணையாக விளங்கும் நண்பர்களைச் சந்தித்து அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாக இருந்தது.

செய்தியும் படமும்:- சத்தியன் (தொடர்ச்சி 20ம் பக்கம்)



# உண்மையான பயங்கரவாதிகள் யார் என்பதை செம்மணி புதைகுழி அம்பலப்படுத்தி விட்டது என இயக்குனர் கௌதமன் சீற்றம்!

எமது ஈழ மண்ணின் உண்மையான பயங்கரவாதிகள் யார் என்பதை யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியானது வெளிப்படுத்தி விட்டது. குறித்த மனிதப் புதைகுழியில் கொடூரமாக கொலை செய்யப்பட்ட உறவுகளது எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்படுகின்ற சம்பவமானது அதிர்ச்சியையும் கடந்தகால அரசின் கோர முகத்தையும் எடுத்துக் காட்டுவதாக தென்னிந்திய பிரபல இயக்குனரும் தமிழ் பேரரசு கட்சியின் தலைவருமாகிய வ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இரண்டாவது கட்ட அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. யூன் 30 அன்றைய அகழ்வுகளின்போது 33 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட பல எலும்புக்கூடுகள் கொடூர கொலை இடம்பெற்றதை ஆதாரப்படுத்துகின்றது.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8